# கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்
# பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள்

உள்ளடக்க அட்டவணை

விதிமுறைகள்

**வரைவிலக்கணங்கள்**

1. சகல கணக்குகளுக்கும் பொதுவானவை
2. கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகள்.'. விபரக்கூற்று.'.இலத்திரனியல் விபரக்கூற்றுச் சேமிப்புக் கணக்குகள்
3. நடைமுறைக் கணக்குகள்
4. கால வைப்புகள்
5. சிறுவர் சேமிப்புக் கணக்குகள் (பராயமடையாதோர் சேமிப்பு)
6. அழைப்பு நிலைய சேவைகள் மற்றும் அழைப்பு நிலைய சேவை இழப்பெதிர்காப்பு
7. வரிகள்
8. வரி இணக்கப்பாடு
9. ஆளுகைச் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்
10. ஏனைய பொதுச் சரத்துகள்
11. வங்கிச் சேவைகளுக்கான செலவுகள்
12. தரவுகளைத் தேக்கிவைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
13. அறிவுறுத்தல்களின் பேரில் செயற்படுதல்
14. பொது வசதிக் கட்டணக் கொடுப்பனவுகள்
15. நிதிக் கொடுக்கல் வாங்கல் பிரமாணங்கள்
16. தகவல் வெளிப்படுத்தல்
17. வாடிக்கையாளர் தகவல்களின் சேகரிப்பு, பரிசீலனை மற்றும் பகிர்வு
18. தரவுகளின் பாதுகாப்பு
19. நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவச் செயற்பாடு
20. வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை
21. கைவிடப்பட்ட சொத்துக்கள்
22. நானாவித விடயங்கள்
23. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை
24. விதிமுறைகளுக்கான திருத்தங்கள்
25. விதிமுறைகளின் வாசகங்கள்
26. எதிர்பாராத நிலைமை

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியில் பேணப்படும் இலங்கை ரூபாயிலான சேமிப்புக் கணக்குகள்.'.நடைமுறைக் கணக்குகள்.'.கால வைப்புக் கணக்குகள் அனைத்தும் பின்வரும் **விதிகள் மற்றும் நிபந்தனை**களினால் ஆளுகை செய்யப்படும்.

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி என்பது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியின் கணக்கு வைப்பாளர்(கள்) (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் "கணக்கு வைப்பாளர்(கள்)", "வாடிக்கையாளர்(கள்)", "நீங்கள்", "உங்கள்", "உங்களது" என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் சந்தர்ப்பம் தேவைப்படுத்தும் அல்லது அனுமதிக்கும் பட்சத்தில் கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வாரிசுகள், நிர்வாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் சட்டபூர்வமான பிரதிநிதிகளையும் உள்ளடக்கும்) வங்கி அலுவல்கள், முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், பல்வேறு தன்மையான வர்த்தக அலுவல்கள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் கார்கில்ஸ் வங்கியிடமிருந்து சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்பாடல் செய்வதற்கும் இடமளிக்கும் வகையில், வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி (சந்தர்ப்பத்திற்கும் சொற்பிரயோகம் அதன் அடுத்துறுனர்கள் மற்றும் சாட்டுநர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம், வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்களை வழங்கும்.

கணக்கு வைப்பாளர்(கள்) பயன்படுத்தும் அல்லது எம்மிடம் கோரும் அல்லது நாம் அவருக்கு∴அவர்களுக்கு வழங்கும் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் யாவும் (இனிமேல் குறித்துரைக்கப்படும்) விதிகள் மற்றும் நிபந்தனைகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே "கார்கில்ஸ் வங்கி" எனவும் "கணக்கு வைப்பாளர்(கள்)" எனவும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் சில சமயங்களில் இந்த ஒப்பந்தத்தின் (இது இனிமேல் குறித்துரைக்கப்படும்) "தரப்புக்கள்" என்று கூட்டாகவும் "தரப்பு" என்று தனித்தனியாகவும் குறிப்பிடப்படலாம்.

கணக்கு வைப்பாளர்(கள்) இங்குள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் பூரணமாகவும் சமமாகவும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஹஹஹ.உயசபடைடளடியமெ.உழ.அ என்ற வங்கியின் வலைத்தளத்தில் பெறலாம் அல்லது அவற்றின் பிரதியொன்றை வங்கியின் ஏதேனுமொரு கிளையில் கேட்டுப்

பெறலாம். இது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

**விதிமுறைகளின் வழங்கல்:**

- ஒருமைச் சொற்கள் பன்மைச் சொற்களையும் பன்மைச் சொற்கள் ஒருமைச் சொற்களையும் உள்ளடக்கும்.

- “நீங்கள்”, “உங்கள்”, “உங்களின்” போன்ற பதங்கள், சந்தர்ப்பம் அனுமதிக்குமிடங்களில், கணக்கு வைப்பாளரைக் குறிக்கும். ஆண் பாலில் குறிக்கப்படும் சொற்கள் பெண் பாலையும் உள்ளடக்கும்.

- இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சகல பொதுவான விண்ணப்பங்களுக்கும் மாத்திரமன்றி சேமிப்பு, நடைமுறை மற்றும் கால வைப்புக் கணக்குகளுக்கான விண்ணப்பங்களுக்கும் ஏற்புடையனவாகும்.

- குறித்துரைக்கப்பட்ட விசேட வங்கித் திட்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான, ஆனால் இங்கு தெரிவிக்கப்படாத, விதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கிளைகளில் கேட்டுப் பெறலாம்.

**வரைவிலக்கணங்கள்:**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தர்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும்:

- **“கணக்கு வைப்பாளர்(கள்)”** (‘நீங்கள்’, ‘உங்கள்’, ‘உங்களது’, ‘வாடிக்கையாளர்’ என்றும் குறிப்பிடப்படும்) என்ற சொற்பிரயோகம் கார்கில்ஸ் வங்கியில் முதலாவதாக அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும் கணக்கின் விண்ணப்பப் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) குறிக்கும்.

- **“ஒப்பந்தம்”** என்பது இனிமேல் தெரிவிக்கப்படவிருப்பனவும் இந்த ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய, காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படக்கூடியனவுமான விதிகள், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான சேவைகளின் வழங்கல்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

- **"ஏரீஎம்" (யுவுஆ)** என்பது தன்னியக்க டெலர் இயந்திரங்களைக் குறிக்கும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தன்னியக்க டெலர் இயந்திரம் என்று குறிப்பீடு செய்யப்படும் சொற்பிரயோகம், அட்டையைப் பயன்படுத்துவதனூடாகத் தொழிற்படுத்தப்படக்கூடிய வலையமைப்பொன்றின் பகுதியாக அமைகின்ற (அட்டை எந்நாட்டில் வழங்கப்பட்டதோ அந்நாட்டினுள்ளே அல்லது அதற்கு வெளியே) அது போன்ற வேறேதும் இயந்திரத்தையும் உள்ளடக்கும்.

- **"அதிகார அமைப்புக்கள்"** என்பது கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு பகுதியின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் நீதித்துறை, நிர்வாக அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்பு, ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம், கருவியகம் அல்லது அதிகார சபை, ஏதேனும் வரி அதிகார சபை, பிணையங்கள் பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட அமுலாக்க அமைப்பு அல்லது அவற்றின் ஏதேனுமொரு முகவரகத்தைக் குறிக்கும்.

- **"வங்கிச் சேவை நாள்" ∴ "வழமையான வங்கிச் சேவை நேரம்"** மற்றும் **"வேலை நாள்∴நேரம்"** என்பன எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், ஒரு வங்கிச் சேவை∴வேலை நாள் மற்றும் வழமையான வங்கிச் சேவை∴வேலை நேரத்தைக் குறிக்கும்.

- **"வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி"** என்பது இலங்கை மத்திய வங்கியின் நியாயாதிக்கத்தின் கீழ் முறைப்படி கூட்டிணைக்கப்பட்டு, இல. 696, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்துடன், இலங்கையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு வங்கியாகும்.

- **"இணக்கக் கடப்பாடுகள்"** என்பது பின்வருவனவற்றிற்குப் பணிந்தொழுக கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவர் கொண்டுள்ள கடப்பாடுகளைக் குறிக்கும்: (ய) பொருத்தமான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதி, சட்டம், பிரமாணம், கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, ஆணை, தன்னார்வக் குறிப்புரை, பணிப்புரை, தடையுத்தரவு, நீதிமன்றக் கட்டளை, கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கும் அதிகார சபை ஒன்றிற்கும் இடையிலான ஒப்பந்தம், கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குப் பிரயோகிக்கக்கூடிய விதத்தில் அதிகார சபைகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை ('சட்டங்கள்'), அல்லது சர்வதேச வழிகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள்

அல்லது நடைமுறைகள். (டி) அதிகார சபைகளினால் கோரப்படும் ஏதேனும் (நியாயமான) அறிக்கையிடல், ஒழுங்குபடுத்தல் வர்த்தக அறிக்கையிடல், வெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் சட்டப்படியான ஏனைய கடப்பாடுகள். (உ) வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு கார்கில்ஸ் வங்கியைத் தேவைப்படுத்தும் சட்டங்கள்.

- **“இரகசியத் தகவல்கள்”** என்பது வாடிக்கையாளர் தகவலை வெளியிடும்போது இரகசியமானது என்று குறிப்பிடும் தகவல்களை அல்லது நியாயமான ஒருவரினால் இரகசியமானது, பகிரங்கமற்றது மற்றும் தனியுரிமத் தன்மையுடையது என்று கருதப்படும் தகவல்களைக் குறிக்கும்.

- **“இணைக்கப்பட்ட நபர்”** என்பது சேவைகளின் வழங்கல் தொடர்பாக கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படும் அல்லது கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவரினால் வேறு வழியில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்குரிய (இதில் தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உள்ளடங்கும்) ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும். வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில், இணைக்கப்பட்ட நபர் என்பது வாடிக்கையாளரின் எவரேனுமொரு பிணையாளி, கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது அதிகாரி, பங்காளித்துவத்தின் பங்காளிகள் அல்லது உறுப்பினர்கள், “கணிசமான உரிமையாளர்”, “கட்டுப்படுத்தும் நபர்”, அல்லது பயனடையும் உரிமையாளர், அறக்காவலர், நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவாளர் அல்லது பாதுகாவலர், குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றை வைத்திருப்பவர், குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துபவர், வாடிக்கையாளரின் பிரதிநிதி, முகவர் அல்லது நியமத்தர், அல்லது வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கியுடன் கொண்டிருக்கும் வங்கி உறவுகள் தொடர்பாக வாடிக்கையாளருடன் தொடர்புகளை வைத்திருக்கும் வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களையும் உள்ளடக்கலாம்.

- **“கட்டுப்படுத்தும் நபர்கள்”** என்பது (பொதுவாக) ஒரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் நபர்களைக் குறிக்கும். (நம்பிக்கைப் பொறுப்பகம் ஒன்றைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்பனவாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாவலர், பயனடைபவர் அல்லது பயனடையும் பிரிவினர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பகத்தின் மீது தீர்க்கமான இறுதிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் வேறேதும் நபர்கள் இதில் உள்ளடங்குவர். நம்பிக்கைப் பொறுப்பகம் அல்லாத ஒரு சட்டபூர்வ

நிறுவனமாயின், சமமான அல்லது ஒத்தியல்பான கட்டுப்பாட்டு நிலையில் உள்ளவர்களை இச் சொற்றொடர் குறிக்கும்).

- **"வாடிக்கையாளர் தகவல்"** என்பது வாடிக்கையாளரின் அல்லது இணைக்கப்பட்ட நபரின் தனிப்பட்ட விபரங்கள், இரகசியத் தகவல்கள் மற்றும்.'.அல்லது வரித் தகவல்களைக் குறிக்கும் (இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்).

- **"நிதிசார் குற்றம்"** என்பது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், இலஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு, மோசடி, பொருளாதார அல்லது வர்த்தகத் தடைகளை மீறுதல் மற்றும்.'.அல்லது இந்த விடயங்கள் தொடர்பான சட்டங்களை மீறுதல் அல்லது மீறுவதற்குத் தந்திரமாக முயற்சி செய்தல் என்பவற்றைக் குறிக்கும்.

- **"தகவல்"** என்பது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) பாவனைக்காக எம்மால் அல்லது எவரேனும் தகவல் வழங்குநரினால் வழங்கப்படும் ஏதேனும் நிதி, சந்தை அல்லது வேறேதும் தகவல்களையும் தரவுகளையும் குறிக்கும்.

- **"தகவல் வழங்குநர்"** என்பது கார்கில்ஸ் வங்கி தவிர்ந்த தகவல் வழங்கும் ஏனைய நபர் எவரையும் குறிக்கும். தகவல் வழங்குநருக்குத் தகவல் வழங்குபவர்களும் இதில் உள்ளடக்கப்படுவார்கள்.

- **"நிறுவனம்"** என்பது இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கென, ஒரு நிறுவனமாகக் கருதப்பட வேண்டுமென கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) கார்கில்ஸ் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட ஏதேனும் மூன்றாம் தரப்பு நிதி நிறுவனத்தைக் குறிக்கும்.

- **"அறிவுறுத்தல்"** என்பது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அனுப்பப்பட்டு, கார்கில்ஸ் வங்கியினால் பெறப்படும் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்துமூல வேண்டுகோளை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறேதும் தன்னியக்க அறிவுறுத்தலைக் குறிக்கும்.

- **"இழப்பு"** என்பது ஏதேனும் உரிமைக் கோரல், அறவீடு, செலவு (ஏதேனும் சட்ட மற்றும் நிபுணத்துவ சேவைக்கான செலவுகளும் உள்ளடங்கும்), சேதங்கள், கடன், செலவினம், வரி, பொறுப்புக்கள், கடப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள், வழக்கு, நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு விசாரணை அல்லது தீர்ப்புக்களைக் குறிக்கும். இவை எவ்வாறு கணிக்கப்பட்டவையாகவும் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில்,

எதிர்விளைவாக, தண்டனையாக அல்லது தற்செயலாக ஏற்பட்டவையாகவும் இருக்கலாம்.

- **“செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்”** என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து வைத்திருக்கும் கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கணக்கு எவ்வாறு செயற்படுத்தப்படும் என்பதையும் அக் கணக்குத் தொடர்பில் வங்கி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் எடுத்துக்கூறும் அறிவுறுத்தல்களாகும்.

- **“கடவுச்சொல்”** என்பது தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை ஊடாக அல்லது யுவுஆ அட்டை, கடன் அட்டை பற்று அட்டைகளின் மூலம் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்காக வங்கியினால் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) வழங்கப்பட்ட ஏதேனும் இரகசியச் சொல், சொற்றொடர் மற்றும் அல்.்.பா எண்களைக் கொண்ட இலக்கத்தைக் குறிக்கும்.

- **“தனிப்பட்ட விபரம்”** என்பது ஒரு நபரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய வகையில் அந்த நபர் (மற்றும் தரவு இரகசியச் சட்டம் நிறுவனங்களுக்குச் செல்லுபடியாகும் நாடுகளிலுள்ள நிறுவனங்கள்) தொடர்பான விபரங்களைக் குறிக்கும். இந்த விபரங்களுள் பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்), தொடர்பு விபரங்கள், வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை, விவாக நிலை போன்றவையும் உள்ளடங்கும்.

- **“சேவைகள்”** என்பது, வரையறையின்றி, (ய) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல், (டி) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் (பிணையங்களின் கையாளுகை, முதலீட்டு ஆலோசனை, தரகு, முகவர், பாதுகாவலர், கிளியரிங் அல்லது தொழில்நுட்பக் கொள்முதல் சேவைகளும் இதில் உள்ளடங்கும்), விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், துணைக் கடன் மதிப்பீடு மற்றும் வங்கி வசதிக்கான தகுதி மதிப்பீடு, (உ) வாடிக்கையாளருடன் ர்ளுடீஊ பேணும் ஒட்டுமொத்த உறவுகள் (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி

வசதிகள், சந்தை ஆய்வு, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

- **“விபரக்கூற்று”** என்பது ஏதேனும் காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள், கணக்கு மீதி என்பவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் காலத்திற்குக் காலம் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்படும் அறிக்கையைக் குறிக்கும். கார்கில்ஸ் வங்கி பொருத்தமெனக் கருதும் வேறு தகவல்களும் இதில் சேர்க்கப்படலாம்.

- **“கணிசமான உரிமையாளர்கள்”** என்பது ஒரு நிறுவனத்தில் 10மூக்கு மேற்பட்ட இலாபத்திற்கான உரிமையை அல்லது 10மூக்கு மேற்பட்ட பங்கை நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும்.

- **“வரி அதிகாரசபைகள்”** என்பது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, வருமான, நிதி மற்றும் நாணய அதிகார சபைகளைக் குறிக்கும்.

- **“வரித் தகவல்கள்”** என்பது கார்கில்ஸ் வங்கி ஏதேனும் வரி அதிகார சபைக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு (அல்லது பணிந்துதொழுகலை நிரூபிப்பதற்கு அல்லது பணிந்தொழுகாமையைத் தவிர்ப்பதற்கு) அவசியமென நியாயமான முறையில் கருதும் விதத்தில் வாடிக்கையாளரின் (அந்த வாடிக்கையாளர் ஒரு தனிநபராக, வியாபாரமாக அல்லது இலாபம் கருதாத அல்லது வேறு வகையான நிறுவனமாக இருக்கலாம்) அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் எவரேனும் உரிமையாளரின், “கட்டுப்படுத்தும் நபரின்”, “கணிசமான உரிமையாளரின்”, பயனடையும் உரிமையாளரின் வரி நிலைமையுடன் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்களைக் (அத்துடன் இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்) குறிக்கும். “வரித் தகவல்கள்” என்பதில் வரி வசிப்பிடம் மற்றும்.'.அல்லது நிறுவனத்தின் அமைவிடம் (பொருத்தமாயின்), வரி வாழிடம், வரி அடையாள இலக்கம், வரிச் சான்றிதழ் படிவங்கள், சில தனிப்பட்ட தரவுகள் என்பவற்றைக் குறிக்கும். (பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்) வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், தேசிய இனம், பிரஜாவுரிமை) என்பனவும் உள்ளடங்கும்)

- **“வரிச் சான்றிதழ் படிவங்கள்”** என்பது கணக்கு வைத்திருப்பவரின் அல்லது நிறுவனமொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள நபரின் வரி நிலைமையை ஊர்ஜிதம்

செய்வதற்காக, காலத்திற்குக் காலம், வரி அதிகார சபை ஒன்றினால் அல்லது கார்கில்ஸ் வங்கியினால் வழங்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் ஏதேனும் படிவங்களை அல்லது வேறு ஆவணங்களைக் குறிக்கும்.

- **"விதிகள்"** என்பது இந்த ஒப்பந்தத்தை ஆட்சி செய்யும் விதிகள் மற்றும் நிபந்தனைகள், ஏதேனும் பொறுப்புத் துறப்புகள், இணைய வலைத்தள இரகசிய அறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அவை காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும்போது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) எம்மால் அறிவிக்கப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் என்பவற்றைக் குறிக்கும்.

- **"கொடுக்கல் வாங்கல்"** என்பது கணக்குகள் தொடர்பில் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளை கார்கில்ஸ் வங்கி எடுப்பதற்காக வாடிக்கையாளர் ஒருவரினால் எழுத்து மூலம் அல்லது பற்று.்.யுவுஆ மூலம் அல்லது இணையத்தளம் ஊடாக அல்லது எதிர்காலத்தில் அறிமுகம் செய்யப்படக்கூடிய வேறு ஊடகம் மூலம் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கப்படும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தலைக் குறிக்கும் (பண மீளப்பெறுகைகள், விற்பனை ஸ்தானத்திலான கொடுப்பனவுகள், பண.்.காசோலை வைப்புக்கள், பணப் பரிமாற்றங்கள் முதலியன கொடுக்கல் வாங்கல்களுக்கு உதாரணங்களாகும்).

## 1. சகல கணக்குகளுக்கும் பொதுவானவை

### 1.1 பிரவேச நிபந்தனைகள்

1.1.1 வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள ஆவணங்கள் (உதா: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம்), வசிப்பிட முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பன ஊர்ஜிதம் செய்யப்படுவதன் பேரில் வங்கியினால் அங்கீகரிக்கப்படும் நபர்.்.நபர்கள், சேமிப்புக் கணக்கை, நடைமுறைக் கணக்கை அல்லது கால வைப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

1.1.2 சேமிப்புக் கணக்கு(கள்) நடைமுறைக் கணக்கு(கள்) அல்லது கால வைப்புக் கணக்கு(கள்) (இனிமேல் "கணக்கு" அல்லது கூட்டாகக் "கணக்குகள்" என்று குறிப்பிடப்படும்) பின்வருபவர்களினால் ஆரம்பிக்கப்படலாம்:

1.1.2.1 ஒரு தனி நபர் தனது பெயரில் ஆரம்பிக்கலாம்.

1.1.2.2 இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் செயற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் தமது பெயர்களில் கூட்டாக ஆரம்பிக்கலாம்.

1.1.3 ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு தனித்துவமான "கணக்கு இலக்கம்" வழங்கப்படும். வங்கியுடனான சகல கடிதத் தொடர்புகளிலும் சகல நிதி (வைப்பு, பண மாற்ற, விசாரணை, கொடுப்பனவுச் சீட்டுக்கள் மற்றும் மீளப்பெறுகைப் படிவங்கள்) மற்றும் நிதி சாரா கொடுக்கல் வாங்கல் ஆவணங்களிலும் இந்த இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.

1.1.4 ஒவ்வொரு கணக்கும் அதற்குரிய குறைந்தபட்ச மீதித் தொகை நிபந்தனையைக் கொண்டிருக்கும். இத் தொகை காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச தொகையை கணக்கு வைப்பாளர்(கள்) பேணாவிட்டால், அக் கணக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் மற்றும்.˙.அல்லது சேவைக் கட்டணங்களை வங்கி அறவிட முடியும். நடைமுறையிலுள்ள கட்டணப் பட்டியலின் அடிப்படையில் இக் கட்டணங்கள் அறவிடப்படும்.

1.1.5 கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், அந்தக் கூட்டுக் கணக்கு வைப்பாளரின் வரவிலுள்ள பணம் உயிருடன் எஞ்சியிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது வைப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். செயற்பாட்டு அறிவுறுத்தலுக்கு அமையப் பணத்தை கொடுப்பனவு செய்தமைக்காக எந்தவொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

கூட்டுக் கணக்கு வைப்பளர்களில் ஒருவரின் மரணம் மற்றிய அறிவித்தல் வங்கிக்குக் கிடைத்ததும், அத்தகைய ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் வரவாகவுள்ள அல்லது வைத்திருக்கப்படும் பணம், பிணையங்கள், உறுதிப்பத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் அனைத்தையும் உயிருடன் எஞ்சியிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது வைப்பாளர்களுக்கு வழங்குவதுடன் வங்கியின் கடப்பாடு பூரணமாக நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதை ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஒப்புக்கொள்கிறார் என்பதைச் செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் குறிப்பிடுகின்றன. கணக்கின் பேரில் உறப்பட்ட மேலதிகப் பற்றிற்கு அல்லது வேறேதும் கடப்பாட்டிற்கு கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளி ஆவார்கள். குறிப்பிட்டதொரு கணக்கு தொடர்பில் எவரேனுமொரு கணக்கு வைப்பாளரின் அதிகாரத்தை மாற்ற அல்லது இரத்துச்செய்ய கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் வேறொருவர் அல்லது பலர் (அனைவரும் அல்ல) விரும்பும் பட்சத்தில், அத்தகைய கணக்கு அப்போதிலிருந்து சகல கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினாலும் கூட்டாகச் செயற்படுத்தப்பட வேண்டுமெனக் கோருவதற்கு வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் நடவடிக்கை எடுக்கும்.

1.1.6 வங்கியானது அதற்கான ஏதேனும் பொறுப்புக்களைக் கொண்ட கணக்குகளை முன்னறிவித்தல் இல்லாமலே இணைத்து அல்லது ஒருங்கிணைத்து, அத்தகைய கணக்குகளில் இருக்கக்கூடிய ஏதேனும் பணத்தை அல்லது வேறேதும் கணக்குகளின் பேரில் அல்லது வேறேதும் வழியில் வங்கியிடமிருந்து உங்களுக்கு வருமதியாகவுள்ள பணத்தை அத்தகைய பொறுப்புகளுக்கு எதிராக எதிரீடு செய்ய முடியும். அத்தகைய பொறுப்புகள் எதேச்சையான, அடிப்படையான அல்லது இணையான, தனித்தனியான அல்லது கூட்டான பொறுப்புகளாக இருக்கலாம்.

1.1.7 வங்கியிடமுள்ள ஏதேனும் கணக்கில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரமளிப்பிற்கு அமைவாக கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அதிகாரமளிக்கப்பட்ட உண்மையான எழுத்துமூல அறிவுறுத்தல்களின் (நிலையான அறிவுறுத்தல்களும் உட்படும்) பேரில் மாத்திரமே வங்கி நடவடிக்கை எடுக்கும்.

1.1.8 வங்கியின் தற்றுணிபுப்படியும் இழப்பெதிர்காப்பு பெறப்படுவதற்கு அமைவாகவும் வங்கிக்கும் கணக்கு வைப்பாளருக்கும் இடையே குறிப்பானதொரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலன்றி தொலைநகல் அல்லது இலத்திரனியல் அஞ்சல் அல்லது வேறேதும் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பேரில் வங்கி நடவடிக்கை எடுக்காது.

## 1.2 வைப்புக்கள்

1.2.1 வைப்புக்களை விரும்பிய வேளைகளில் எத்தனை தடவைகளும் மேற்கொள்ள முடியும். டெலர் கருமபீடங்களில் மேற்கொள்ளப்படும் சகல வைப்புக்களும் வைப்புச் சீட்டில் அச்சிடப்படும் உறுதிப்படுத்தல் அடையாளத்தின் மூலம் அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் மூலம் உறுதி செய்யப்படும்.

1.2.2 கணக்கில் வைப்புச் செய்யப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். செலுத்தும் வங்கியினால் அக் காசோலைகள் அங்கீகரிக்கப்படும் வரை பணத்தை மீளப்பெற முடியாது. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வாறு இருந்தாலும், முறையான அறிமுகம் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி காசோலைகளைச் சேகரிக்கும் மற்றும் அங்கீகரிக்கும் நோக்கத்திற்கு சேமிப்புக்

கணக்குகளைப் பயன்படுத்த முடியாது. ஆகவே, கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்தக்கூடியதாக எழுதப்பட்ட பண வைப்புக்கள், காசோலைகள், பங்கிலாபக் கொடுப்பனவுப் பத்திரங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

1.2.3 ரொக்கப் பணம் அல்லாத வைப்புக்கான பூரண சட்டபூர்வ உரிமை உங்களுக்கு உள்ளதென நீங்கள் உறுதியளித்து உத்தரவாதம் செய்வதுடன், அத்தகைய பணம் அல்லாத வைப்பில் காணப்படும் கையொப்பங்கள், ஒப்புதல் குறிப்புகள் மற்றும் விபரங்களின் உண்மைத் தன்மைக்கும் பூரண பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்கள்.

1.2.4 அங்கீகாரத்திற்காக.'.சேகரிப்பிற்காக வைப்புச் செய்யப்படும் வேறு வங்கிகளின் பெயரிலான ரூபாய் காசோலைகள், லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டட்டின் (“டுயமெய ஊடநயச °சளையவந டுஅைவைநன – டுஊீடு”) விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கும். இந்த விதிகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். பெறுபவரின் வங்கியினால் விதிக்கப்படும் ஏதேனும் தரகுப்பணம் அல்லது கட்டணம், வங்கியின் பூரண தற்றுணிபிற்கேற்ப, சம்பந்தப்பட்ட கணக்கில் அல்லது வேறேதும் கணக்கில், மேலதிக அறவீட்டுடன் அல்லது மேலதிக அறவீடு இல்லாமல் பற்று வைக்கப்படும்.

1.2.5 வங்கியின் பெயரில் எழுதப்பட்ட வரைபுகள்.'.காசோலைகளின் பேரிலான பணம் கணக்கு ஒன்றில் வரவு வைக்கப்படும்போது, வங்கியானது அதனால் பிரசுரிக்கப்பட்ட கட்டணப் பட்டியலுக்கு அமைய, கையாளுகைக் கட்டணங்களைக் கழித்துக்கொள்ளும்.

1.2.6 நேர்மாற்றங்கள் மற்றும் பதிவுகளின் திருத்தம்

திருத்தம் வங்கியானது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கணக்கில் தவறுதலாக வரவு வைத்துவிட்டால், எந்தக் கட்டத்திலும் மற்றும்.'.அல்லது எந்த நேரத்திலும் அப் பதிவு மற்றும் வட்டியை (இருப்பின்) நேர்மாற்றம் செய்யவும் சம்பந்தப்பட்ட தொகையை கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து மீளக்கோரவும் உரிமை கொண்டுள்ளது.

1.2.7 வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு நாணய அனுப்பீடுகள்

1.2.7.1 வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

பணப் பாவனையற்ற தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைச் செய்யவும் வெளிநாட்டு நாணயத்தில் செலவுகளைச் செய்யவும் வாடிக்கையாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் உதவுகின்றன.

1.2.7.2 அனுப்பீடுகள்

(a) முற்றிலும் விண்ணப்பதாரரின் இடர் பொறுப்பின் பேரில் வெளிநோக்கிய பண அனுப்பீடுகளைச் செயற்படுத்த வங்கிக்கு உரிமையுண்டு. அதன்போது ஏற்படக்கூடிய ஏதேனும் இலாப அல்லது ஒப்பந்த இழப்பு அல்லது கிரயம் அல்லது செலவு அல்லது விசேட, நேரடியற்ற அல்லது விளைவான இழப்பு அல்லது சேதம், தகவல் அனுப்பீட்டில் ஏற்படக்கூடிய தாமதம், தவறு மற்றும் விடுபடுகை அல்லது அதனைப் பெறும்போது ஏற்படக்கூடிய தவறான விளக்கம், கொடுப்பனவைச் செய்ய வேண்டிய நாட்டின் கிளியரிங் அமைப்பினால் இடம்பெறக்கூடிய ஏதேனும் தாமதம், அனுப்பீட்டைச் சேகரிப்பதில் பயனடைபவரின் வங்கியின் தவறுகை அல்லது கவனயீனம் அல்லது வங்கியின் அல்லது அவரது முகவரின் (முகவர்களின்) கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் நிகழ்வு அல்லது ஏதேனும் பிரதிநிதி, முகவர்கள் அல்லது உப முகவர்களின் ஏதேனும் செயல், விடுபடுகை, கவனயீனம், தவறுகை அல்லது திவால்நிலை என்பவற்றிற்கு வங்கி பொறுப்பாளியாகாது. பயனாளியின் உண்மைத் தன்மை மற்றும் அடையாளத்தை ஊர்ஜிதம் செய்யும் பொறுப்பு வங்கிக்குக் கிடையாது. அது முற்றிலும் எனது.̇.எமது பொறுப்பாகும்.

வங்கியினால் மேற்கொள்ளப்படும் வெளிநோக்கிய பண அனுப்பீட்டுச் செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியினதும் ஏனைய தகுதி வாய்ந்த அதிகார அமைப்புகளினதும் பொருத்தமான தற்போதைய மற்றும் எதிர்காலப் பிரமாணங்கள், ஆணைகள், விதிகள், கட்டளைகள் மற்றும் சுற்று நிருபங்கள் அனைத்திற்கும் உட்படும்.

வெளிநோக்கிய பண அனுப்பீடு தொடர்பாக வங்கி தனது வழமையான நடவடிக்கைகளை எடுக்கும். அவ்வாறு செய்யும்போது, வங்கியானது எனது.̇.எமது சார்பில் ஏதேனும் தொடர்பாடல் முறையை, பிரதிநிதியை, உப முகவரை அல்லது வேறேதும் முகவரகத்தைப் பயன்படுத்த உரிமை கொண்டுள்ளது.

(b) வங்கியானது வெளியோக்கிய பண அனுப்பீட்டை மேற்கொள்ளும்போது அனுப்பீட்டுத் தினத்தன்று நிலவிய வங்கியின் விற்பனை வீதத்திலேயே அனுப்பீட்டுத் தொகையைக் கணக்கின் நாணயத்திலிருந்து மாற்றுவது வழக்கம். எனினும், நாணய மாற்ற மற்றும் பரிமாற்றத் திகதிகள் முற்றிலும் வங்கியின் தற்றுணிபைப் பொறுத்ததாகும்.

(c) பண அனுப்பீடு இரத்துச் செய்யப்படும் பட்சத்தில், பிரதிநிதிகளிடமிருந்து உண்மையாகப் பெறப்பட்ட தொகையின் அடிப்படையிலும் வங்கியின் அன்றைய கொள்வனவு வீதத்திற்கு அமைவாகவுமே மீளளிப்பு மேற்கொள்ளப்படும். இவ் விடயத்தில் வங்கியினாலும் அதன் பிரதிநிதிகள் அல்லது முகவரினாலும் உறப்பட்ட செலவுகளை மீளப்பெற வங்கி உரிமை கொண்டுள்ளது. சேகரிக்கப்பட்ட இரத்துச்செய்கை கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் தரகுக் கட்டணங்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.

(d) கொடுப்பனவில் அல்லது கொடுப்பனவு அறிவித்தலை வழங்குவதில் தாமதம், இடைவழியில் ஏற்படும் இழப்பு, ஏதேனும் பொருளின், கடிதத்தின் அல்லது தந்தியின் அனுப்பீட்டில் அல்லது விநியோகத்தில் ஏற்படும் சிதைவு, தவறு, விடுபடுகை, துண்டிப்பு அல்லது தாமதம் அல்லது வங்கிப் பிரதிநிதிகளின் அல்லது முகவர்களின் செயல்கள் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

(e) வங்கியானது உள்நோக்கிய பண அனுப்பீட்டைப் பெறும்போது, பணம் பெறப்பட்ட தினத்தன்று நிலவிய வங்கியின் விற்பனை வீதத்திலேயே பணத்தை தொகையைக் கணக்கின் நாணயத்திற்கு மாற்றி வரவு வைப்பது வழக்கம்.

1.2.7.3 வாடிக்கையாளரின் இடர் பொறுப்பு

வாடிக்கையாளர் ஒவ்வொரு வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளும்போதும், அதில் வெளிநாட்டு நாணய இடர்கள் இருக்கக்கூடும் என்பதையும் அவற்றிற்கு வங்கி பொறுப்பாளியாகாது என்பதையும் பூரணமாக அறிந்திருக்க வேண்டும்.

1.2.8 வாடிக்கையாளரினால் சேகரிப்புக்காகச் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் காசோலைகள், பில்கள், சீட்டுக்கள், வரைவுகள், பங்கிலாபம், உத்தரவாதம் அல்லது வேறேதும்

பத்திரத்தின் ஒப்புதல் குறிப்புகள் அல்லது செயற்படுத்தல்களை உத்தரவாதம் செய்வதன் காரணமாக சேகரிப்பு வங்கியாளர் என்ற முறையில் வங்கிக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு எதிராக வாடிக்கையாளர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குகிறார். வங்கியினால் அவ்வாறு வழங்கப்படும் ஒவ்வொரு உத்தரவாதமும் வாடிக்கையாளரின் வேண்டுதலுக்கு இணங்க வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

## 1.3 காலாந்த விபரக்கூற்றுகள்

1.3.1 கணக்கில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களும் கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் (காகித விபரக்கூற்று மற்றும் இலத்திரனியல் விபரக்கூற்று) காட்டப்படும். இந்த விபரக்கூற்றுகள் கணக்கு வைப்பாளர்(கள்) அறிவுறுத்திய கால இடைவெளிகளில், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, வங்கியின் பதிவேடுகளிலுள்ள அவரது (அவர்களது) தபால் முகவரிகளுக்கு.׃.மின்னஞ்சல் முகவரிகளுக்கு தபாலில்.׃.மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

1.3.2 ஒவ்வொரு விபரக்கூற்றும் கிடைத்தவுடன் அல்லது குறைந்தபட்சம் விபரக்கூற்றுக் கிடைக்கப்பெற்ற இருபது (20) தினங்களுக்குள் கணக்கு வைப்பாளர்(கள்) அவ் விபரக்கூற்றிலுள்ள சகல பதிவுகளையும் பரீசீலனை செய்து, தன்னிடம் (தம்மிடம்) உள்ள பதிவுகளுடன் ஒப்புநோக்கிச் சரிபார்க்க வேண்டும். ஏதேனும் தவறுகள், விடுபடுகைகள், முறைகேடுகள் (ஏதேனும் மோசடியான அல்லது அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்களும் உட்படும்) காணப்படின் அல்லது அந்த விபரக்கூற்று தொடர்பில் வேறேதும் ஆட்சேபணைகள் (ஒட்டு மொத்தமாக "கணக்கு முறைகேடுகள்" எனப்படும்) இருப்பின், கணக்கு வைப்பாளர்(கள்) அவை குறித்து உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். கணக்கு வைப்பாளர் (கள்) குறிப்பிட்ட மீளாய்வுக் காலப்பகுதிக்குள் வங்கிக்கு அறிவிக்கத் தவறினால், விபரக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதியும் கணக்கு முறைகேடுகள் உள்ளிட்ட சகல பதிவுகளும் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் அங்கீகரிக்கப்பட்டவையாகவும் கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) மற்றும் வங்கியைக் கட்டுப்படுத்துபவையாகவும் கருதப்படும். இச் சரத்திற்கு அமைவாக கணக்கு வைப்பாளர் (கள்) அறிவித்த கொடுக்கல் வாங்கல்கள் தவிர, மிகச் சமீபத்திய விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சகல பொறுப்புக்களிலிருந்தும் வங்கி விடுவிக்கப்படும்.

1.3.2.1 வேறிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்விளைவுகளுக்கு மேலதிகமாக, மேலே சரத்து 1.3.2இல் தெரிவிக்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக்கு அமைந்து நடக்க கணக்கு வைப்பாளர்(கள்) தவறினால், மற்றும் கணக்கு வைப்பாளரின் நடத்தை அல்லது தவறுகை காரணமாக ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் (வரிகள், அறவீடுகள், அபராதங்கள், கட்டணங்கள், தண்டங்கள் உட்பட வங்கிக்கு ஏற்படும் அல்லது வங்கிக்கு எதிராகக் கொண்டுவரப்படும் சகல விதமான இழப்புக்களும் இதில் அடங்கும்) அத்தகைய இழப்பிற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஒப்புக்கொள்கின்றார்(கள்). இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டது போல, விபரக்கூற்றுக்களை உரிய காலத்திற்குள் பரிசீலனை செய்ய கணக்கு வைப்பாளர்(கள்) தவறினால், விபரக்கூற்றின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பரிசீலனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் தவறு அல்லது விடுபடுகைக்கான காரணம், அத்தகைய விபரக்கூற்று உரிய காலத்திற்குள் பரிசீலனை செய்யப்படாமையே என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்). வங்கியின் பாரிய கவனயீனம் அல்லது வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தவறு காரணமாக, பிழையாக அல்லது தவறுதலாக இடம்பெற்ற மீளப்பெறுகை மூலம் பிரதான தொகையில் ஏற்பட்ட உண்மையான நேரடி இழப்பு தொடர்பாக மட்டுமே வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) பொறுப்பாளியாகும் என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்).

1.3.2.2 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காலாந்த விபரக்கூற்று மற்றும் வேறேதும் அறிக்கை அல்லது அறிவித்தல் அல்லது தகவல் கிடைக்காவிட்டால் வாடிக்கையாளர் உடனடியாக எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

1.3.3 விபரக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அல்லது வேறேதும் விடயத்தில் கணக்கு வைப்பாளர்(கள்) ஆட்சேபணை தெரிவித்தால், அந்த ஆட்சேபணை கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் கணக்கு வைப்பாளரின் முறைப்பாட்டைத் தீர்த்துவைக்க கார்கில்ஸ் வங்கி மனப்பூர்வமான மற்றும் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். இந்த முயற்சிகளின் முடிவில், சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் செல்லுபடியானதென்று கார்கில்ஸ் வங்கி தீர்மானிக்குமாயின், அது பற்றி கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவிக்கப்படும்.

## 1.4 கணக்குகளை மூடுதல்

எவ்வித காரணமும் தெரிவிக்காமல் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு மறுக்க வங்கிக்கு உரிமையுண்டு.

அவ்வாறே, கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்குப் போதுமான முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எவ்வித காரணமும் தெரிவிக்காமல் கணக்கொன்றை மூடிவிடுவதற்கும் வங்கி உரிமை கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு பூச்சியம் அல்லது அதற்குக் குறைந்த மீதியை கொண்டிருந்த (அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் குறைந்தபட்ச மீதியைக் கொண்டிராத)

கணக்கை, கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு 7 வேலைநாள் எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு மூடிவிடவும் வங்கிக்கு உரிமையுண்டு.

கணக்கின் தவறான நடத்தை காரணமாக (நடைமுறைக் கணக்கைப் பொறுத்தவரையில் பணம் இன்மையால் 3க்கு மேற்பட்ட காசோலைகள் திருப்பி அனுப்பப்பட்டமை) அல்லது நடைமுறையிலுள்ள நாணயப் பரிவர்த்தனைப் பிரமாணங்கள் மீறப்பட்டுள்ளன என்று வங்கி கருதும் பட்சத்தில் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவித்தல் கொடுக்காமலே வங்கி தனது தற்றுணிபின் பேரில் கணக்கை மூடிவிடக்கூடும்.

## 2. கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகள்.ஃ. விபரக்கூற்று.ஃ.இலத்திரனியல் விபரக்கூற்றுச் சேமிப்புக் கணக்குகள்

### 2.1 பிரவேச நிபந்தனைகள்

2.1.1. ஆரம்ப வைப்பு

கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகள் மற்றும் விபரக்கூற்று.ஃ.இலத்திரனியல் விபரக்கூற்றுச் சேமிப்புக் கணக்குகளுக்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ.1,000 (ஆயிரம் ரூபாய்) ஆகும்.

வங்கியானது காலத்திற்குக் காலம் இந்த ஆரம்ப வைப்புத் தொகையை முன்னறிவித்தலின்றி மாற்றக்கூடும். வெவ்வேறு சேமிப்புக் கணக்குகளுக்கு வெவ்வேறு ஆரம்ப வைப்புத் தொகையையும் நிர்ணயிக்கக்கூடும். ஆரம்ப வைப்பை விடக் குறைந்த தொகையுடனும் கணக்குகளை ஆரம்பிக்க வங்கி தனது தனித் தற்றுணிபின் பேரில் அனுமதிக்கக்கூடும்.

2.1.2 வட்டி

வட்டியானது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்திற்கேற்ப நாளாந்த மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, மாத முடிவிற்கு முன்னர், குறிப்பிடப்பட்ட கணக்கில் வரவு வைக்கப்படும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தேவைப்படுத்தலுக்கு அமைவாக, சகல கணக்கு வைப்பாளர்களும் தமது கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி அந்தஸ்து மற்றும் வசிப்பிட அந்தஸ்து தொடர்பான சட்டபூர்வ பிரகடனத்தை நிரப்ப வேண்டும். கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) சமர்ப்பிக்கப்படும் பிரகடனத்திற்கேற்ப, காலப்பகுதிக்கான வட்டியிலிருந்து வட்டிக் கொடுப்பனவின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரியை வங்கி கழித்துக்கொள்ளும்.

**2.2 கணக்குப் புத்தகச் சேமிப்புக் கணக்குகள்**

2.2.1 வங்கியினால் வழங்கப்படும் கணக்குப் புத்தகத்தை கணக்கு வைப்பாளர்(கள்) மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

2.2.2 கணக்குப் புத்தகம் தொலைந்தால் அல்லது சேதமடைந்தால், கணக்கு வைப்பாளர்(கள்) அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். கணக்கு வைப்பாளர்(கள்) வைத்திருக்கும் கணக்குப் புத்தகத்தின் தொலைவு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது. இந்த விடயத்தில், கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு இழப்பெதிர்காப்புக் கடிதமொன்றை வழங்கும்படி கேட்கப்படுவார்கள்.

2.2.3 கணக்கு வைப்பாளர்(கள்) கணக்குப் புத்தகத்தில் தாமாகவே எவ்வித பதிவையும் செய்யக்கூடாது. வங்கி கோரும்போது கணக்குப் புத்தகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்குப் புத்தகத்தை இன்னொருவருக்கு உரிமை மாற்றம் செய்யவோ அல்லது பிணையாக வைக்கவோ முடியாது. ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பின்பும், கணக்குப் புத்தகம் பரிசோதிக்கப்பட்டு, சரியான பதிவுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது உறுதி செய்யப்பட வேண்டும். ஏதேனும் தவறுகள் காணப்படின், உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

2.2.4 கணக்குப் புத்தகம் எப்போதுமே சரியான கணக்கு மீதியைக் காட்ட வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில், கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் செய்யப்படாமலே வைப்புக்கள், அறவீடுகள் அல்லது பற்று வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

2.2.5 கணக்குப் புத்தகத்திலுள்ள விபரங்கள் கிரமமான முறையில் இற்றைப்படுத்தப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் 15க்கு அல்லது வங்கியினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் எண்ணிக்கைக்குக் கூடுதலாக இருக்குமாயின், வங்கியானது தனது சுயவிருப்பின் பேரில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களை கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடைசியாகத் தெரிந்த முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கும்.

2.2.6 இந்த விபர அறிக்கைகளின் பிரதிகள் வங்கியிடமிருந்து பின்னர் கோரப்பட்டால், அதற்கான கட்டணம் ஒன்றை அறவிட வங்கிக்கு உரிமையுண்டு. பின்னர், கணக்கு இற்றைப்படுத்தப்படும்போது ஒட்டுமொத்தமான நிகர தொகை பாஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படும்.

2.2.7 கணக்குப் புத்தகச் சேமிப்பிலிருந்து மீளப்பெறுகை
ஆளடையாளம் நிரூபிக்கப்படுவதுடன், கணக்குப் புத்தகம், பூர்த்தி செய்யப்பட்ட மீளப்பெறுகைச் சீட்டு என்பன சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பண மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும். பொருத்தமானவிடத்தில், இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முத்திரை வரி, பற்று வரி அல்லது ஏதேனும் சட்டபூர்வ அறவீடுகள், வரிகள், கட்டணங்கள் என்பவற்றை கணக்கு வைப்பாளர்(கள்) செலுத்த வேண்டியிருக்கும்.

**2.3 விபரக்கூற்று ∴ இலத்திரனியல் விபரக்கூற்று சேமிப்புக் கணக்குகள்**

2.3.1 கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் கணக்குத் தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களினதும் பதிவுகள் தெரிவிக்கப்பட்டிருக்கும். அத்தகைய விபரக்கூற்றுக்கள் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, வாடிக்கையாளர்(கள்) அறிவுறுத்தியபடி, வங்கியிடமுள்ள அவரது (அவர்களது) தபால் முகவரிக்கு∴மின்னஞ்சல் முகவரிக்கு காலாந்த அடிப்படையில் தபால்∴மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

2.3.2 விபரக்கூற்றுச் சேமிப்பிலிருந்து மீளப்பெறுகை
ஆளடையாளம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் பண மீளப்பெறுகைகள் அனுமதிக்கபப்டும். பொருத்தமானவிடத்தில், இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முத்திரை வரி, பற்று வரி அல்லது ஏதேனும் சட்டபூர்வ அறவீடுகள், வரிகள், கட்டணங்கள் என்பவற்றை கணக்கு வைப்பாளர்(கள்) செலுத்த வேண்டியிருக்கும்.

## 3. நடைமுறைக் கணக்குகள்

### 3.1 பிரவேச நிபந்தனைகள்

3.1.1 வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில் வழங்குநரிடமிருந்து அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க இன்னுமொரு நடைமுறை கணக்கு வைப்பாளரிடமிருந்து அறிமுகக் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது குறிப்பிட்ட வாடிக்கையாளர் கணக்கொன்றை வைத்திருக்கும் இன்னுமொரு வணிக வங்கியினால் வழங்கப்பட்ட சிபாரிசுக் கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆளொருவர்∴ஆட்கள் ரூபாய் நாணயத்திலான நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

3.1.2 ஆகக் குறைந்தது ரூ. 20,000∴-ஐ வைப்புச் செய்து ஒரு தனிப்பட்ட நடைமுறை கணக்கை ஆரம்பிக்கலாம். ரூபாய் நாணயத்திலான நடைமுறை கணக்கொன்றுக்குத் தேவைப்படும் ஆரம்ப வைப்புத் தொகையை எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் வங்கி மாற்ற முடியும். வங்கி அதன் தனித் தற்றுணிபின் பேரில் அதனைவிடக் குறைந்த ஆரம்ப வைப்போடு நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கவும் அனுமதிக்கக்கூடும். ஆயினும், காலத்துக்குக் காலம் ஆகக் குறைந்த கணக்கு மீதியை மீளாய்வு செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. தனிப்பட்ட நடைமுறை கணக்கிற்கான தற்போதய குறைந்தபட்ச மீதி ஐயாயிரம் இலங்கை ரூபாய் (ரூ.5,000∴-) ஆகும். இது வங்கியின் தற்றுணிபிற்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். அத்தகைய குறைந்தபட்ச மீதி கணக்கில் பேணப்படாவிட்டால், வங்கியானது சேவைக் கட்டணமாக இருநூற்று ஐம்பது ரூபாயை (ரூ.250∴-) கணக்கில் அறவிடும். இத் தொகை வங்கியின் தனித் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் மாற்றப்படக்கூடும்.

3.1.3 ரூபாய் நடைமுறைக் கணக்குகளின் மீதிக்கு வங்கி எவ்வித வட்டியும் வழங்காது.

3.1.4 ஏதேனும் கொடுப்பனவை ஈடுசெய்யும் நோக்கத்திற்காக அல்லது வாடிக்கையாளரின் ஏதேனும் அறிவுறுத்தலை நிறைவேற்றுவதற்காக, வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் (ஆனால் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற கடப்பாடு கிடையாது) வாடிக்கையாளருக்குக் கடன், நிதி வசதி அல்லது முற்பணம் வழங்கக்கூடும். அது தொடர்பான சகல பொறுப்புக்களும் வங்கி கோரிக்கை விடுத்ததும் (வங்கியினால் வேறு விதமாக எழுத்து மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி) வாடிக்கையாளரினால் மீளளிக்கப்பட வேண்டும். இதற்கென பரஸ்பரம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட வீதத்தில் வட்டி அறவிடப்படும் (அவ்வாறான ஒப்பந்தம் இல்லாத பட்சத்தில் வங்கி அதன் உள்ளக நடைமுறைகளுக்கு அமைவாக நியாயமான வட்டி வீதம் ஒன்றை நிர்ணயிக்கும்).

**3.2 காசோலைப் புத்தகங்கள்**

3.2.1 ரூபாய் நடைமுறை கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) வேண்டுகோளுக்கு இணங்க, காந்த மை அடையாளத்துடன் பதிப்பித்த காசோலைப் புத்தகம்(கள்) விநியோகிக்கப்படும். அரசாங்க முத்திரைக் கட்டணம் ஏதும் நடைமுறையில் இருப்பின் அதனையும் காசோலைப் புத்தகத்தை அச்சிடுவதற்கான செலவையும் உள்ளடக்கிய கட்டணங்கள் இந்தப் புத்தகங்களின் விநியோகத்துக்காக அறவிடப்படும்.

3.2.2 காசோலைப் புத்தகத்திற்கான விண்ணப்பம் கிடைத்ததும் வங்கியானது காசோலைப் புத்தகத்தை வழங்கும். வாடிக்கையாளர்(கள்) அதனை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது அவரது (அவர்களது) சார்பில் ஒருவரை (அவர் முன்கூட்டியே நியமிக்கப்பட வேண்டும்) அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது வங்கியின் பதிவேட்டிலுள்ள முகவரிக்குக் காசோலைப் புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். எந்த வகையில் விநியோகிக்கப்பட்டாலும் அதில் ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்பிற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

3.2.3 ஒரு புதிய காசோலைப் புத்தகம் கிடைத்தவுடன் அதன்மீது பதிப்பிடப்பட்ட தொடர் இலக்கங்கள், கணக்கு இலக்கம் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) பெயர்(கள்) என்பவற்றையும், காசோலைகளின் எண்ணிக்கையையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். எவையேனும் ஒழுங்கீனங்கள் இருப்பின் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

3.2.4 ஏதேனும் காசோலையை வரைவதற்கு முன்னர், காசோலைப் புத்தக அட்டையின் உட்பகுதியில் அச்சிடப்பட்டுள்ள காசோலை விநியோக நிபந்தனைகளை கணக்கு வைத்திருப்பவர்(கள்) நன்கு வாசிக்க வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கும் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற அவற்றின் திருத்தங்களுக்கும் கணக்கு வைத்திருப்பவர்(கள்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

3.2.5 வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையளிப்பு மற்றும் மாதிரிக் கையொப்பத்திற்கு (கையொப்பங்களுக்கு) அமைவாகவே கணக்கு வைத்திருப்பவர்(கள்) காசோலைகளில் கையொப்பமிட வேண்டும். கையொப்பத்தில் அல்லது கையொப்பமிடுபவர்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும்.

3.2.6 மோசடியான திருத்தங்களுக்கு இடமளிக்காத முறையிலும் வங்கிக்குத் தவறான எண்ணத்தை ஏற்படுத்தாத முறையிலும் காசோலைகள் வரையப்பட வேண்டும்.

3.2.7 காசோலையானது நிரந்தர மையினால் (கறுப்பு.'.நீலம்) வங்கியால் வழங்கப்பட்ட காசோலைகளில் மாத்திரம் வரையப்பட வேண்டும். காசோலை வரைபவரின்(களின்) ஒவ்வொரு திருத்தமும் பூரண கையொப்பம்(கள்) மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். காசோலைகளை வரைவதற்கு மின்சார.'.இலத்திரனியல் தட்டச்சுக்கள் மற்றும் அழிபடக்கூடிய மை என்பவற்றைப் பாவிக்கக் கூடாது. உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட முடியாத திருத்தத்திலிருந்து எழுகின்ற இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

3.2.8 கொடுப்பனவுகளின் நிறுத்தம்

காசோலைகள் காணாமற்போனால் அல்லது திருடப்பட்டால் அல்லது தவறுதலாக வைக்கப்பட்டால் கொடுப்பனவை நிறுத்துவதற்காக காசோலை இலக்கம், திகதி, தொகை மற்றும் காசோலை கொடுக்கப்பட்டவரின் பெயர் என்பவற்றை கணக்கு வைத்திருப்பவர்(கள்) உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல் கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில், ஏற்கனவே பணம் வழங்கப்படாத காசோலை(கள்) விடயத்தில் மாத்திரமே அறிவுறுத்தல் கருத்திற்கொள்ளப்படும். தொலைபேசி மூலம் விடுக்கப்படுகின்ற கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தல்கள் 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். 48 மணித்தியாலங்களுக்குள் அத்தகைய உறுதிப்படுத்தல் கிடைக்காவிட்டால், கணக்கு வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) அறிவிக்காமலே அத்தகைய கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தலை வங்கி நிராகரிக்க முடியும். 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தல்களுக்கு வங்கி ஒருபோதும் பொறுப்பாகமாட்டாது.

ஒரு காசோலைக்கான கொடுப்பனவு இரத்துச் செய்யப்படும் பட்சத்தில், காசோலை சமர்ப்பிக்கப்படும்போது கொடுப்பனவு வழங்கப்படாத காரணத்தினால் ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் காசோலை மீட்கப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டால் காசோலை நிறுத்தக் கட்டளை இரத்துச்செய்யப்படவிருந்தால் அது பற்றி உடனடியாக எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்கவும் கணக்கு வைப்பாளர் இணங்குகிறார். கவனயீனத்தினால் அல்லது தவறுதலாக காசோலைக்குப் பணம் செலுத்தப்பட்டிருந்தால் அல்லது அது அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அதற்காக அவர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. நிறுத்தப்பட வேண்டிய காசோலையின் சரியான விபரங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட்டு எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கப்பட்டாலன்றி, காசோலை நிறுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. காசோலை நிறுத்தவேண்டுகோளின் இரத்துச்செய்கையும்

எழுத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இரத்துச்செய்கை அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரத்திற்கும் நிறுத்தப்பட்ட காசோலையின் சமர்ப்பணத்திற்கும் இடையே நியாயமான காலம் தாண்டும் வரை இரத்துச்செய்கை நடைமுறைக்கு வராது. கொடுப்பனவு நிறுத்தக் கட்டளையானது எழுத்து மூலம் புதுப்பிக்கப்படாவிட்டால் ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். காசோலை ஒன்றின் பேரிலான கொடுப்பனவை நிறுத்தும்படி வாடிக்கையாளர் விடுக்கும் ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் வங்கியானது கட்டணமொன்றை (வங்கியினால் தீர்மானிக்கப்படும் நிலையான கட்டணம்) அறவிடும்.

3.2.9 காசோலைப் புத்தகங்கள் பாவிக்கப்படாத நேரத்தில் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருப்பதை கணக்கு வைத்திருப்பவர்(கள்) உறுதிசெய்யவேண்டும்.

3.2.10 வாடிக்கையாளரினால் அல்லது வங்கியினால் கணக்கு மூடப்படும்போது, வாடிக்கையாளருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு பாவிக்கப்படாமல் எஞ்சியிருக்கும் காசோலைகள் அனைத்தும் வங்கியின் சொத்து என்பதால், அவை உடனடியாக வங்கிக்கு மீளளிக்கப்பட வேண்டும்.

3.2.11 இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும் வகையில், கணக்கிலுள்ள தொகைக்கு மேலதிகமான மொத்தத் தொகையைக் கொண்ட பல காசோலைகள் அல்லது பில்கள் ஒரே தடவையில் சமர்ப்பிக்கப்பட்டால், கணக்கிலுள்ள பணத்திற்கேற்ப எந்தெந்தக் காசோலைகளுக்கு அல்லது பில்களுக்கு பணம் செலுத்துவது என்பதைத் தீர்மானிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

3.3 மீளப்பெறுகைகள்

3.3.1 வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட விசேட முன்னேற்பாடு இல்லாமல், கணக்கு வைத்திருப்பவர்(கள்) மேலதிகப் பற்றை பெற முடியாது. போதியளவு பணம் கணக்கில் இல்லாத சந்தர்ப்பத்தில் காசோலைகளை நிராகரிப்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. மேலும், மறுக்கப்பட்ட காசோலைக்காக ஒரு கட்டணத்தை அறவிடும் உரிமையும் வங்கிக்கு உள்ளது. காசோலையின்(களின்) மேலதிகப் பற்றுக்கு வங்கி தனது தற்றுணிபின் பேரில் அனுமதிக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கேட்கின்றபோது நிபந்தனையின்றி வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பவற்றுடன் மேலதிகமாகப் பெற்ற தொகையை மீளச் செலுத்துத்தும் கடப்பாடு கணக்கு வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) உண்டு. கணக்கு வைத்திருப்பவரிடம் (வைத்திருப்பவர்களிடம்) இருந்து வட்டியையும் வங்கிக் கட்டணங்களையும் மீட்டுக்கொள்வதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது. ஏதேனும் மேலதிகப் பற்று வசதியொன்றை வழங்குவதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக வங்கியைப் பிணைக்கின்ற ஓர் ஒப்பந்தமாக இதனைக் கொள்ள முடியாது.

3.3.2 கொடுக்கல் வாங்கல் மீது காலத்துக்குக் காலம் சட்டத்தினால் விதிக்கப்படும் அறவீடுகள் உட்பட நடைமுறையிலிருக்கும் சகல அரசாங்க விதிப்பனவுகளும் வரிகளும் கணக்கு வைத்திருப்பவரிடம் (வைத்திருப்பவர்களிடம்) இருந்து அறவிடப்படும். சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன் விளைவாக, கணக்கு வைத்திருப்பவர்(கள்) முகங்கொடுக்கும் உரிமைக் கோரல்களுக்கு அல்லது வேறு விதத்தில் அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

## 4 கால வைப்புக்கள்

### 4.1 பிரவேச நிபந்தனைகள்

4.1.1 ரூபாய் நாணயக் கால வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்காக குறைந்தபட்ச வைப்புத் தொகை **பத்தாயிரம் இலங்கை ரூபாய் (ரூ.10,000.∴-)** ஆகும். இந்த வைப்பு ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்துக்கு வலுவில் இருக்க வேண்டும். வங்கியானது எவ்வித முன்னறிலித்தலுமின்றி ரூபாய் நாணயக் கணக்கிற்கான ஆரம்ப வைப்புத் தொகையை மாற்ற முடியும். வங்கியின் தனித் தற்றுணிபின் பேரில் குறைவான ஆரம்ப வைப்புக்களோடு கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் அனுமதிக்க முடியும்.

4.2 மீளப்பெறுகைகள்

4.2.1 கால வைப்புக்களை அதன் முதிர்ச்சியின் பின்னர் மாத்திரமே மீளப்பெறலாம். ஏதேனும் கால வைப்பின் முதிர்ச்சிப் பெறுவனவுத் தொகைகளானது, அத் தொகையினை மீள் முதலீடு செய்வதற்கான அறிவுறுத்தல் எதுவும் வழங்கப்பட்டிருக்காவிடின், குறிப்பிடப்பட்ட முதிர்ச்சித் தினத்திலிருந்து உடனடியாக அடுத்துறுகின்ற வேலை நாளில் மாத்திரமே மீளளிக்கப்படும்.

4.2.2 மாறான அறிவுறுத்தல் எதுவும் இல்லாத பட்சத்தில், முதிர்ச்சியடையும் வைப்புத் தொகையானது முதிர்ச்சித் தினத்தில் நிலவுகின்ற வட்டி வீதத்தில் அதேயளவான காலத்துக்குப் புதுப்பிக்கப்படும்.

4.2.3 எனினும், கணக்கு வைத்திருப்பவரினால் (வைத்திருப்பவர்களினால்) உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல வேண்டுதல்களுக்கு அமைய, (வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஆணையளிப்பிற்கேற்ப) வங்கியானது தனது தற்றுணியின் பேரில் கால வைப்புக்களை அவற்றின் முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கலாம். அவ்வாறு வங்கியின் தனித் தற்றுணியின் பேரில் முதிர்ச்சிக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட கால

வைப்புக்கள், அந்த வைப்புத் தொகை வங்கியிலிருந்த காலத்திற்கேற்ப, தண்ட வரிக்கு உட்படும்.

4.2.4 தற்போதுள்ள வைப்புப் தொகையுடன் சேர்த்து மீள முதலீடு செய்யும் நோக்கத்திற்காக கால வைப்பினை முதிர்ச்சிக்கு முன்பே திரும்பப் பெற்றால், வைப்புத் தொகை வங்கியிலிருந்த காலத்திற்கேற்ப, தண்டக் கட்டணங்கள் அறவிடப்படும்.

4.2.5 கால வைப்புக்களின் மீளப்பெறுகை மற்றும் வட்டி மீது ஒழுங்குபடுத்துனர்கள் கட்டுப்பாடுகளை விதிக்கும் பட்சத்தில் கணக்கு வைத்திருப்பவர்(கள்) அத்தகைய கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தொழுக வேண்டும்.

4.3 வட்டி

4.3.1 கால வைப்புக்களுக்கான வட்டி வீதம் முன்னறிவித்தல் இல்லாமலே மாற்றப்படலாம். எனினும், ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட கால வைப்புக்களைப் பொறுத்தவரையில், அவை முதிர்ச்சி அடையும் வரை அவற்றிற்கான வட்டி வீதத்தை வங்கி மாற்றாது.

## 5 சிறுவர் சேமிப்புக் கணக்குகள் (பராயமடையாதோர் சேமிப்பு)

5.1 பிரவேச நிபந்தனைகள்

5.1.1 கார்கில்ஸ் வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கு (கணக்கு) பராயமடையாத ஒருவரின் பெயரில் (கணக்கு வைப்பாளர்) ஆரம்பிக்கப்படும். இக் கணக்கில் எவரும் வைப்புக்களைச் செய்யலாம்.

5.1.2 கணக்கை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ஐந்நூறு ரூபாய் (ரூ.500.00) ஆகும். இது காலத்திற்குக் காலம் மாற்றத்திற்கு உட்படக்கூடும்.

5.1.3 கணக்கு ஆரம்பிக்கப்படும்போது வங்கியினால் பரிசீலிக்கப்படுவதற்காக, பிறப்புகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட கணக்கு வைப்பாளரின் மூலப் பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப் பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்றை வங்கி தனது தேவைக்காகத் தன்னுடன் வைத்துக்கொள்ளும்.

5.1.4 கணக்கிற்கான வட்டி வீதம் முன்னறிவித்தல் இல்லாமலே மாற்றப்படலாம்.

5.1.5 கணக்கின் பேரில் செயற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை இற்றைப்படுத்துவதற்காக கணக்கு வைப்பாளருக்குக் கணக்குப் புத்தகம் ஒன்று வழங்கப்படும்.

5.1.6 கணக்கு வைத்திருப்பவர் 18 வயதை அடைந்ததும் சாதாரண சேமிப்புக் கணக்கிற்கான வட்டி வழங்கப்படும். சிறுவர் சேமிப்புக் கணக்கானது (சாதாரண சேமிப்புக் கணக்கிற்கான குறைந்தபட்ச மீதி நிபந்தனைக்கு அமைவாக) ஒரு சாதாரண சேமிப்புக் கணக்காக மாற்றப்படும். கணக்கு வைப்பாளர் தனது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதுடன் தேவையான ஆவணங்களைப் பூர்த்தி செய்யவும் வேண்டும்.

5.1.7 கணக்கு வைப்பாளர் மரணமடையும் பட்சத்தில், கணக்கிலுள்ள பணம் இலங்கையின் மரணசாசனமற்ற வாரிசுகள் சட்டத்தின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படும்.

5.1.8 கணக்கினைத் தனது பெயரில் கொண்டுள்ள கணக்கு வைப்பாளரே அக் கணக்கில் செய்யப்படும் வைப்புக்களின் பயனாளி ஆவார். ஆகவே, கணக்கு வைப்பாளர் 18 வயதை அடையும் வரை பணத்தை மீளப்பெறவோ மூடவோ அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும், பராயமடையாதவரின் உயர் கல்வி, அவசர மருத்துவச் சிகிச்சை போன்ற நோக்கங்களுக்காக அல்லது காரணங்களுக்காக பெற்றோர் அல்லது பெற்றோர் உயிருடனில்லாத பட்சத்தில் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர் விண்ணப்பித்தால், வங்கியானது தனது தனித் தற்றுணிபின் பேரில் மீளப்பெறுகைகளை அனுமதிக்கக்கூடும். அத்தகைய மீளப்பெறுகை அல்லது கணக்கு மூடுதல் வேண்டுகோளின் செல்லுபடியாகும் தன்மையைத் தீர்மானிக்கும் தனியுரிமை வங்கிக்கு உண்டு. வேண்டுகோளின் உண்மைத் தன்மையை நிரூபிப்பதற்கான ஆவணச் சான்றுகளையும் வங்கி கோரக்கூடும்.

5.1.9 கொடுக்கல் வாங்கல்களின் பதிவுகளைப் பேணுவது கணக்கு வைப்பாளர்∴ பெற்றோர்∴ பாதுகாவலரின் (கூட்டாக “வாடிக்கையாளர்” எனப்படுவார்) பொறுப்பாகும். கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்கள் மற்றும் அறிக்கைகள் கோரப்பட்டால், வங்கியானது அதன் பிரசுரிக்கப்பட்ட விதிப்பனவுகள் பட்டியலுக்கு அமைவாகக் கட்டணங்களை அறவிட உரிமை கொண்டுள்ளது.

5.1.10 வங்கியானது வாடிக்கையாளரின் கணக்கில் தவறுதலாக வரவு வைக்க நேர்ந்தால், எந்த நேரத்திலும் அது தொடர்பான பதிவை நேர்மாற்றம் செய்ய மற்றும்∴அல்லது குறிப்பிட்ட தொகையை வாடிக்கையாளரிடமிருந்து மீளப்பெற உரிமை கொண்டுள்ளது.

## 6. அழைப்பு நிலைய சேவைகள் மற்றும் அழைப்பு நிலைய சேவை இழப்பெதிர்காப்பு

இனிமேல், அழைப்பு நிலைய சேவைகள் மற்றும் அழைப்பு நிலைய சேவை இழப்பெதிர்காப்பு தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளை (சரத்து 6.2) பொறுத்தவரையில், “கணக்கு” என்பது சாதாரண சேமிப்புக் கணக்கு, நடைமுறைக்

கணக்கு, கால வைப்பு, வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள், வங்கியினால் தற்சமயம் வழங்கப்படும் மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய வேறேதும் வசதிகள் அல்லது சேவைகளைக் குறிக்கும். அத்தகைய கணக்கை வைத்திருப்பவர் “கணக்கு வைப்பாளர்” என்று குறிப்பிடப்படுவார்.

6.1 வங்கியினால் (அதன் தற்றுணிபிற்கேற்ப) வழங்கப்படும் அழைப்பு நிலையச் சேவைகள் பின்வருவன தொடர்பிலான தொலைபேசி அறிவுறுத்தல்களை உள்ளடங்கும்:

6.1.1 கணக்கு மீதி விசாரணை, (கணக்கு வைப்பாளரின் கணக்குகள் தொடர்பான கடைசிக் கொடுக்கல் வாங்கல் விபரங்கள், நாணயப் பரிவர்த்தனை வீதங்கள் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள்.

6.1.2 விபரக்கூற்றுகள் (தெரிவு செய்யப்பட்ட கணக்குகளுக்கு), காசோலைப் புத்தகங்கள் (இரண்டாவது புத்தகத்திலிருந்து), கணக்கு வைப்பாளரின் கணக்கு தொடர்பான காசோலை நிறுத்தம் சம்பந்தமான வேண்டுகோள்கள்.

6.1.3 வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படக்கூடிய வேறு வங்கியியல் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

6.2 ஏதேனும் உபகரணக் கோளாறு அல்லது செயலிழப்பு உட்பட, முழுமையாக அல்லது பகுதியாக வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் தொலைபேசி மூலமான அறிவுறுத்தலைச் செயற்படுத்த முடியாதுபோனால், கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) அதற்காக வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தாமல் விடுவதால் அல்லது அது தொடர்பாக கணக்கு வைப்பாளருக்கு நேரடியாக, நேரடியற்ற முறையில் அல்லது விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு வங்கியானது எந்த வகையிலும் பொறுப்பாளியாக மாட்டாது. வங்கியானது தொலைபேசி மூலமான அறிவுறுத்தல்களை ஏற்பதால், அவற்றைச் செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தத் தவறுவதால் நேரடியாக, நேரடியற்ற முறையில் அல்லது விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் சட்ட நடவடிக்கை, வழக்கு, உரிமைக் கோரல்கள், இழப்புக்கள், சேதங்கள், செலவுகள் என்பவற்றிற்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்பட வேண்டும். கார்கில்ஸ் வங்கியுடனான வங்கிச் சேவை முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

6.3 இங்குள்ள விதிகளின் பேரில் தொலைபேசி அறிவுறுத்தல்களை வழங்க கணக்கு வைப்பாளருக்கு உள்ள உரிமையானது, எப்போதும் வங்கியின் சுயவிருப்பத்திற்கு

அமைவானதாகவே இருக்கும். வங்கி எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் கொடுக்காமலே இந்த உரிமையை இரத்துச்செய்ய முடியும்.

6.4 தொலைபேசிமூல அல்லது வேறு அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதற்குப் போதியளவு பணம் (அல்லது முன்னேற்பாடு செய்யப்பட்ட கடன் வசதி) கணக்கு வைப்பாளரின் கணக்கில் இருப்பதை கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) உறுதிப்படுத்த வேண்டும். அறிவுறுத்தலைச் செயற்படுத்த வங்கி தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கில் போதியளவு பணம் இல்லாவிடினும், வங்கி தனது சுயவிருப்பின் பேரில் அறிவுறுத்தலைச் செயற்படுத்தத் தீர்மானித்தால், கணக்கு வைப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறாமலும் அவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும் அவ்வாறு செய்யலாம். இதன் விளைவாக ஏற்படக்கூடிய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடன் வசதிக்கும் அது தொடர்பான அறவீடுகளுக்கும் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) பொறுப்பேற்க வேண்டும். அத்தகைய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடனுக்கு நடைமுறையிலுள்ள வீதங்களில் வட்டி அறவிடப்படும். இது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் சம்பந்தப்பட்ட கணக்குகளின் வழமையான விதிகளினாலும் ஆளுகை செய்யப்படும்.

6.5 அழைப்பு நிலையத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கென, வங்கியின் விதிப்பனவுகள் திட்டத்திற்கு அமைவான சேவைக் கட்டணங்களை அறவிடுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

6.6 அழைப்பவரின் நம்பகத்தன்மையை ஊர்ஜிதம் செய்வதற்கு வங்கி தன்னாலியன்ற நியாயமான நடவடிக்கைகளை எடுக்கும். எனினும், வங்கியானது நல்ல விசுவாசத்துடனும் பாரிய கவனக்குறைவு இல்லாமலும் செயற்படுமாயின், தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட வேண்டுகோள்களின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக கணக்கு வைப்பாளருக்கோ (வைப்பாளர்களுக்கு) அல்லது வேறு தரப்பினருக்கோ எந்த விதத்திலும் பொறுப்பாளியாக மாட்டாது.

6.7 தொலைபேசி மூலமான அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளுதல், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் அல்லது நடவடிக்கை எடுக்காமல் விடுதல் தொடர்பில் வங்கி மேற்கொள்ளும் செயலின் அல்லது விடயத்தின் நேரடி அல்லது நேரடியற்ற விளைவாக எதேனுமொரு தரப்பினால் வங்கிக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், உரிமைக் கோரல்கள் அல்லது வங்கிக்கு ஏற்படும் இழப்புக்கள், செலவுகள் என்பவற்றிற்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பை வழங்கவும் அதனைத் தொடர்ந்து பேணவும் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் கணக்கு வைப்பாளர்(கள்) இணங்கிப் பொறுப்பேற்கின்றார்(கள்)

6.8 வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பண மாற்றம் அல்லது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) மற்றும்.'.அல்லது அழைப்பு எடுத்தவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில் கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு எதிராக எவ்வித உரிமைக் கோரலையும் சமர்ப்பிக்க முடியாது என்பதையும் வங்கியானது நல்ல விசுவாசத்துடனும் பாரிய கவனக்குறைவு இல்லாமலும் செயற்பட்டிருக்குமாயின், இது சம்பந்தமாக நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது என்பதையும் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கின்றார்(கள்). அழைப்பு நிலையச் சேவை முடிவுறுத்தப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு நடைமுறையிலிருக்கும்.

## 7. வரிகள்

7.1 சகல கணக்கு வைப்பாளர்களும் கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி நிலைமை மற்றும் வதிவிட நிலைமை பற்றிய பிரகடனத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். கணக்கு வைப்பாளர்களின் சம்பந்தப்பட்ட பிரகடனங்களும் வரி அந்தஸ்து விபரங்களும் உரிய வேளையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் முழுப் பொறுப்பும் கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) சாரும். சம்பந்தப்பட்ட பிரகடனங்களையும் வரி அந்தஸ்து விபரங்களையும் உரிய வேளையில் வழங்கத் தவறுதல் உள்ளிட்ட ஏதேனும் வழிகளில் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) ஏதேனும் வரிப் பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தால், வங்கி எவ்விதத்திலும் அதற்குப் பொறுப்பாளியாகாது. கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம் சகல தற்போதைய மற்றும் புதிய கணக்குகளுக்கும் பொருந்தும் என்பதுடன், அதே ஆணையளிப்பினால் ஆளுகை செய்யப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது பொருத்தமான வேறொரு அதிகார சபையினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வீதம் அல்லது வீதங்களுக்கு அமைய, வட்டிக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்படும் இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி அல்லது வேறேதும் வரி குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வட்டிக் கொடுப்பனவிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். செலுத்தப்படாத இடைநிறுத்திவைக்கப்பட்ட வரிகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அல்லது பொருத்தமான வேறொரு அதிகார சபை பிறிதொரு வேளையில் வங்கியிடமிருந்து கோருமானால், கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவித்தல் கொடுக்காமலே, கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து அவற்றை மீட்க வங்கிக்கு உரிமையுண்டு.

## 8. வரி இணக்கப்பாடு

8.1 வரிக் கடப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் எம்மால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கடப்பாடுகளை புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கடப்பாடுகளில் உள்ளடங்கும்). ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். இணைக்கப்பட்ட நபரின் அல்லது உங்களின் வாழிட நாடு, வசிப்பிடம், பிராஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச் சில நாடுகள் கொண்டிருக்கலாம். கார்கில்ஸ் வங்கி வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய உங்கள் வரிக் கடப்பாடுகள் தொடர்பாக எமக்கு எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, எம்மால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கடப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

**9. ஆளுகைச் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்**

9.1 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவாகவே அமுல் செய்யப்படும். வழக்குகள் இலங்கை நீதிமன்றங்களிலேயே தாக்கல் செய்யப்படும். எனினும், வங்கி பொருத்தமெனக் கருதும் பட்சத்தில் வேறேதும் நாட்டின் அல்லது நியாயாதிக்கத்தின் நிதிமன்றங்களிலும் வழக்கைத் தாக்கல் செய்ய உரிமை கொண்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்குப் பொருத்தமான சட்டங்கள் பிரயோகிக்கப்படும். அத்தகைய நீதிமன்றங்களுக்கும் அத்தகைய சட்டங்களுக்கும் பணிந்தொழுக கணக்கு வைப்பாளர்(கள்) இணங்குகின்றார்∴இணங்குகின்றனர். உறப்படும் ஏதேனும் சட்டச் செலவுகள், நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் சட்டத்தரணிகளின் கட்டணங்கள் கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடன் பொறுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

**10. ஏனைய பொதுச் சரத்துகள்**

10.1 நம்பிக்கைப் பொறுப்பகங்களினால் ஆரம்பிக்கப்படும் கணக்குகளுக்கு மேலதிக விதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படலாம்.

10.2 மீளப்பெறுகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீது அதிகார அமைப்புக்களினால் வரையறைகள் விதிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய வரையறைகளுக்குக் கணக்கு வைப்பாளர்(கள்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

10.3 கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) கணக்கு ஆரம்ப விண்ணப்பத்தில் அல்லது வேறு வழியில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் அவரது.∵.அவர்களது அறிவுக்கெட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) உறுதிப்படுத்துகின்றார்.∵.உறுதிப்படுத்துகின்றனர்.

10.4 தொடர்பாடல் நோக்கங்களுக்காக வங்கிக்கு வழங்கப்பட்ட கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) தொடர்பு விபரங்களில் (தொலைபேசி, மின்னஞ்சல் முதலியன) ஏதேனும் மாற்றம் ஏற்படின், அது பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

10.5 கணக்கு வைப்பாளர்(கள்) கடைசியாக வங்கிக்கு அறிவித்த முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவித்தல்கள், அவ்வாறு அனுப்பப்பட்ட 7 வேலை நாட்களுக்குள் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) கிடைத்ததாகக் கொள்ளப்படும்.

10.6 கூட்டுக் கணக்குகள்

10.6.1 வாடிக்கையாளர் கணக்கு ஒரு கூட்டுக் கணக்காக இருந்தால், அத்தகைய கணக்கின் பேரிலான ஏதேனும் மேலதிகப் பற்று, கடன் அல்லது வேறு கடன் வசதிக்கும் அவை தொடர்பான வட்டி, தரகுப்பணம் மற்றும் வங்கிக் கட்டணங்கள், செலவுகளுக்கும் கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளி ஆவார்கள்.

10.6.2 வாடிக்கையாளரின் மரணம் தொடர்பான நடைமுறை

கூட்டுக் கணக்கொன்றின் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், அக் கணக்கில் வரவாக எஞ்சியுள்ள பணம், பிணையங்கள், உறுதிப் பத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் (பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் ஏனைய பொருள்களும் உள்ளடங்கும்) உயிருடனிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது கணக்கு வைப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

10.6.3 அறிவித்தல்கள்

தேவையேற்படும் சந்தர்ப்பங்களில், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களின் பட்டியலில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளவரின் பெயருக்கே அறிவித்தல்கள் அனுப்பப்படும்.

## 11 வங்கிச் சேவைகளுக்கான செலவுகள்

### 11.1 வட்டி, அறவீடுகள் மற்றும் பிரத்தியேக செலவுகள்

#### 11.1.1 வட்டி மற்றும் அறவீடுகள்

வாடிக்கையாளர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய பணத்திற்காக, காலத்திற்குக் காலம் வங்கியுடன் எழுத்து மூலம் இணங்கப்பட்ட வீதத்திலும் கால இடைவெளிகளிலும், அல்லது அவ்வாறான எழுத்துமூல ஒப்பந்தம் இல்லாத பட்சத்தில் வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையிலும், வட்டியைச் செலுத்த வேண்டும். வாடிக்கையாளரினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதங்கள், கட்டணங்கள், தரகுப்பணம் உள்ளிட்ட வங்கியின் பொதுவான அறவீடுகள் பற்றிய விபரங்கள் எமது கிளையிலும் வலைத்தளத்திலும் கிடைக்கக்கூடிய வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலில் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

கணிப்பீட்டு முறை

வங்கியின் வட்டி கணிப்பீட்டு முறை பின்வருமாறு. வங்கியின் சகல சொத்து மற்றும் பொறுப்பு விடயங்களுக்கும் அது பொதுவானது. இக் கணிப்பீட்டு முறையானது காலத்திற்குக் காலம் வங்கியினால் அதன் தற்றுணிபிற்கேற்ப மாற்றப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

மீதி அடித்தளம்ழு வட்டி வீதம்.∴ 100 ழு வட்டி அடிப்படை

கவனிக்கவும்: வட்டி அடிப்படையானது நாணயத்தில் தங்கியுள்ளது. உதாரணமாக: டுமுசு ளை யுஉவரயட.∴ யுஉவரயடஇ ருளுனு ளை யுஉவரயட .∴ 360.

#### 11.1.2 நிலுவைத் தொகைகள் மீதான வட்டி

உரிய வேளையில் செலுத்தப்படாத தொகைகள் அல்லது முன்னேற்பாடு இல்லாமல் பெறப்பட்ட மேலதிக தொகைகளுக்கு வங்கி தனது தற்றுணிபின் பேரில் உயர்ந்த வட்டி வீதத்தை அறவிட உரிமை கொண்டுள்ளது. அத்தகைய வட்டி வீதம் வங்கியின் தீர்மானத்திற்கேற்ப காலாந்தம் ஒருங்கிணைக்கப்படலாம்.

#### 11.1.3 மாறுபடக்கூடிய வட்டி மற்றும் கட்டணங்கள்

மாறுபடக்கூடிய வட்டி வீதம் கொண்ட கடன்களைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக வட்டி வீதம் சீராக்கப்படும். எழுத்து மூலம் வேறு விதமாக இணங்கப்பட்டிருந்தாலன்றி, வங்கியானது அதன் நியாயாமான தற்றுணிபிற்கேற்ப சேவைக் கட்டணங்களை மாற்றக்கூடும்.

#### 11.1.4 கிரயங்கள் மற்றும் செலவுகள்

சகல தரகுப்பணங்களும் வாடிக்கையாளருக்கு முன்கூட்டியே அறிவித்து அல்லது அறிவிக்காமல் வங்கியினால் வழமையாக விதிக்கப்படும் ஏனைய அறவீடுகளும் இப் பொது நிபந்தனைகள், விசேட நிபந்தனைகள் அல்லது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான வேறேதும் ஒப்பந்தங்களின் பிரகாரம் வங்கியினால் உறப்படும் சட்டச் செலவுகள் உள்ளிட்ட ஏனைய சகல செலவுகளும் அறவீடுகளும் ஏனைய பிரத்தியேக செலவுகளும் வங்கியினால் கோரப்பட்ட உடனேயே செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அத் தொகைகளை வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் பற்று வைக்கவும் வங்கிக்கு உரிமையுண்டு.

11.1.5 வரிகள் மற்றும் ஏனைய விதிப்பனவுகள்

வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய சட்டபூர்வ விதிப்பனவுகள், முத்திரை வரிகள் மற்றும் ஏனைய விதிப்பனவுகள் அனைத்தும் வாடிக்கையாளரினால் வங்கிக்கு மீளளிக்கப்பட வேண்டும்.

11.2 வங்கியானது அதன் பூரண தற்றுணிபிற்கேற்ப பொருத்தமானதெனக் கருதும் சேவைக் கட்டணங்கள் மற்றும்.்.அல்லது வேறு கட்டணங்களைக் காலத்திற்குக் காலம் விதிக்க உரிமை கொண்டுள்ளது.

11.3 வங்கியானது அதன் பூரண தற்றுணிபிற்கேற்ப பொருத்தமென கருதும் விதத்தில், சேவைக் கட்டணத்தையும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள எவையேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் காலத்திற்குக் காலம் முன்னறிவித்தல் இல்லாமலே கூட்ட, நீக்க அல்லது மாற்ற உரிமை கொண்டுள்ளது.

வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலை றறற.உயசபடைடளடியமெ.உழஅ என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வையிடலாம் மற்றும்.்.அல்லது கணக்கு வைப்பாளர்(கள்) வங்கியின் கிளையொன்றில் கேட்டுப் பெறலாம். விபரக்கூற்றுத் தகவல்கள் மூலமும் இது அறிவிக்கப்படும். இத்தகைய வழிகளிலான அறிவித்தலானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

## 12. தரவுகளைத் தேக்கிவைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்

கணக்குத் தொடர்பான விபரக்கூற்றுகள், வவுச்சர்கள், மீளப்பெறுகை.்.வைப்பு சீட்டுகள், காசோலைகள் மற்றும் வேறேதும் கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை வங்கி அதனால் குறித்துரைக்கப்படும் ஒரு காலப்பகுதிக்குத் தேக்கிவைத்திருக்கும். அக் காலப்பகுதியின் பின்பு அவை அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர்

அத்தகைய விபரக்கூற்றுகள் அல்லது கொடுக்கல் வாங்கல் பிரதிகளை வழங்குவதற்கான பொறுப்பு எதனையும் வங்கி ஏற்றுக்கொள்ள மாட்டாது. கணக்கு வைப்பாளர்(கள்) தொடர்பான தகவல்கள் உட்பட கணக்குச் சார்ந்த சகல தகவல்களும் அனுப்பீடு செய்யப்பட மற்றும்.'. அல்லது களஞ்சியப்படுத்தப்பட அல்லது எந்த இடத்திலாவது வைத்திருக்கப்படவும்.

பின்வருவோரினால் அவை பயன்படுத்தப்படவும் முடியும் என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொண்டு, அதற்குச் சம்மதிக்கின்றார்(கள்):

12.1.1 வங்கியின், அதன் தலைமை அலுவலகத்தின், வங்கிக் கிளை அலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர்.

12.1.2 எவரேனும் தரவு செயற்படுத்தும் சேவை வழங்குநர்.

12.1.3 விபரக்கூற்றுக்களை அச்சிட்டுத் தபாலில் அனுப்ப வங்கியினால் ஈடுபடுத்தப்படும் எவரேனும் நபர்.

12.1.4 வங்கியினால் அவசியமெனக் கருதப்படும் எவரேனும் நபர்.

12.1.5 வங்கியானது அதன் வழமையான வியாபார நடைமுறையின்போது ஏதேனும் சேவைகளை (கடித விபரக்கூற்றுகளை அச்சிடுதல், கடித உறையில் இடுதல், தபால் செய்தல் அல்லது அது போன்ற சேவைகள்) வெளி நபர்களிடம் ஒப்படைக்கும் பட்சத்தில், அத்தகைய அனுப்பீடு, களஞ்சியப்படுத்தல் மற்றும்.'.அல்லது அணுகுதல் நிர்வாக மற்றும் உள்ளகக் கண்காணிப்புத் தேவைகளுக்கு அவசியமெனக் கருதினால், அவ்வாறான எவரேனும் நபர்.

**13. அறிவுறுத்தல்களின் பேரில் செயற்படுதல்**

கணக்குகளில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்யும்படி கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) விடுக்கும் உண்மையான எழுத்துமூல அறிவுறுத்தல்களின் (நிலையான அறிவுறுத்தல்களும் உட்படும்) பேரில் மட்டுமே வங்கி நடவடிக்கை எடுக்கும். இந்த அறிவுறுத்தல்கள் தபால் மூலம் அல்லது வங்கியின் கிளையொன்றிற்கு அதன் வேலை நேரத்தில் கையளிக்கப்படுவதன் மூலம் வழங்கப்படலாம். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய ஓர் அறிவுறுத்தல் செயற்படுத்தப்படாததால் ஏற்படக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரல்கள், இழப்புகள் அல்லது செலவுகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது. அதனைப் பொறுப்பாளியாக்கவும் முடியாது. வங்கிக்கும் கணக்கு வைப்பாளருக்கும் (வைப்பாளர்களுக்கும்) இடையே குறிப்பான ஒப்பந்தம் எதுவும் இல்லாத பட்சத்தில்,

தொலைநகல், மின்னஞ்சல் அல்லது வேறேதும் இலத்திரனியல் ஊடகத்தின் மூலமாகப் பெறப்படும் எந்த அறிவுறுத்தலையும் வங்கி ஏற்றுக்கொள்ள மாட்டாது.

வங்கியானது தனது தனித் தற்றுணிபின் பேரில் அவ்வாறு செய்தாலன்றி பண வைப்புக்கள், பண அல்லது காசோலை மீளப்பெறுகைகள், காசோலை வைப்புக்கள் மற்றும் வேறு பற்று.ஃ.வரவு கொடுக்கல் வாங்கல்களுக்கென வெவ்வேறான தகவல் அறிக்கைகளை வங்கி தபால் மூலம் அனுப்ப மாட்டாது.

14 **பொது வசதிக் கட்டணக் கொடுப்பனவுகள்**

ஏதேனுமொரு பொது வசதிக் கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை வங்கியானது உரிய வேளையில் செலுத்தியிருக்குமாயின், அப் பொது வசதிக் கம்பனி தொடர்பாகக் கணக்கு வைப்பாளர் பேணும் கணக்கில் அத் தொகையை வரவு வைப்பதில் பொது வசதிக் கம்பனியின் தரப்பில் ஏற்படும் ஏதேனும் தாமதத்திற்கு வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

15 **நிதிக் கொடுக்கல் வாங்கல் பிரமாணங்கள்**

வங்கியானது பணம் தூயதாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், தடைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நபர்களுக்கு அல்லது அமைப்புக்களுக்கு நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் ஆகியவை தொடர்பில் வங்கிக்குப் பொருத்தமான சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைந்து நடக்க வங்கி தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அத்தகைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைந்தவை என்று வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க உரிமை கொண்டுள்ளது. அத்தகைய நடவக்கைகளுள் கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அல்லது அவரின் (அவர்களின்) சார்பில் வங்கி அமைப்பினூடாக அனுப்பப்படும் ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகளை இடைநிறுத்தி விசாரணை செய்தல், ஏதேனுமொரு பெயர் தடை செய்யப்பட்ட ஒரு நபரின் அல்லது நிறுவனத்தின் பெயரா என்பதை விசாரித்தல் ஆகியனவும் (ஆனால், அவை மட்டுமல்ல) உள்ளடங்கும். அத்தகைய நடவடிக்கைகளின்போது பின்வருவனவற்றின் விளைவாக ஏதேனுமொரு தரப்பிற்கு ஏற்படக்கூடிய இழப்பு (இது நேரடியானதாக அல்லது விளைவானதாக இருக்கலாம் என்பதுடன் இலாபம் அல்லது வட்டியின் இழப்பையும் உள்ளடக்கும்) அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது:

15.1.1 இத்தகைய சகல சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைவாக வங்கியானது தனது பூரண தற்றுணிபின் பேரில் பொருத்தமெனக் கருதி எடுக்கும் ஏதேனும் நடவடிக்கைகளினால், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏனைய கடப்பாடுகளின் கீழ் தமது ஏதேனும் கடமைகளைச் செய்வதில் வங்கியினால் ஒன்றினால் புரியப்படும் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை.

15.1.2 இச் சரத்தின் கீழ் வங்கியானது தனது உரிமைகளில் எதையேனும் பிரயோகித்தல். சில சமயங்களில், வங்கி எடுக்கக்கூடிய நடவடிக்கையினால் சில தகவல்களை செயற்படுத்தும் அலுவல் தடைப்படலாம் அல்லது தாமதமடையலாம். ஆகவே, இந்தச் சரத்துக்கு அமைவான நடவடிக்கை எடுக்கப்படும் காலப்பகுதியில், சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்குரிய ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகள் மற்றும் தொடர்பாடல்கள் தொடர்பாக வங்கியின் அமைப்புக்களிலுள்ள ஏதேனும் தகவல்கள் முற்றிலும் சரியானவை, தற்போதுள்ளவை அல்லது மிகப் புதியவை என்று வங்கி உறுதிப்படுத்த மாட்டாது. மேலாதிக்கம் செலுத்தக்கூடிய ஏதேனும் சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்படுத்தல்களுக்கு முரணாகாத வகையில், வங்கியானது அத்தகைய சூழ்நிலைகள் பற்றி முடியுமானளவு விரைவில் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவிக்கும்.

15.1.3 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்திற்கு அமைய, சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் தொடர்பான விதிகள்.

அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கலுக்கான முயற்சி ஏதேனும் சட்டவிரோத செயலுடன் அல்லது வேறேதும் குற்றச் செயலுடன் தொடர்புடையதாக இருக்கலாமெனக் கருத வங்கிக்கு நியாயமான காரணங்கள் இருப்பின், அல்லது பணம் தூயதாக்குதல், ஒரு நபரினால், குழுவினால் அல்லது நிறுவனத்தினால் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கப்படுதல், ஏதேனும் விசாரணை அல்லது வழக்கு தொடர்பான விடயங்கள் உட்பட ஏதேனும் உத்தேச சட்டவிரோத செயல் அல்லது வேறேதும் குற்றச் செயல் பற்றிய தகவல் வங்கிக்குக் கிடைத்திருப்பின், வங்கி அது பற்றி நிதிப் புலனாய்வுப் பிரிவுக்கு (குஜஐரு) அறிவிக்கும்.

அத்தகைய அறிக்கையானது அதற்குரிய விசேட படிவத்திலும் குஜஐரு தேவைப்படுத்தும் விபரங்களை உள்ளடக்கியதாகவும் சமர்ப்பிக்கப்படும்.

ஏதேனும் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள வேண்டாமென குஜஐரு பணிப்புரை வழங்கும் பட்சத்தில், அவசியமான விசாரணைகளை நடத்துவதற்கும் சட்ட அமுலாக்க

அமைப்புக்களின் உதவியைப் பெறுவதற்கும் குஜருக்கு இடமளிக்கும் வகையில் வங்கியானது அக் கொடுக்கல் வாங்கலை இடைநிறுத்தும்.

இந்த விதிகளின் கீழ் வங்கியினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கை பற்றிய தகவலைப் பெறும் உரிமை வாடிக்கையாளருக்குக் கிடையாது. எவ்வாறிருந்தாலும், வங்கியினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் வங்கிக்கு எவ்வித பொறுப்பு அல்லது கடப்பாடும் கிடையாது.

2006ஆம் ஆண்டின் நிதிக் கொடுக்கல் வாங்கல் பிரமாணங்கள் சட்டத்திற்கு அமைய மேற்குறிப்பிட்ட அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களை குஜருக்கு அறிக்கையிடுதல் தொடர்பான விதிகள்.

பிரமாணத்தினால் குறித்துரைக்கப்பட்ட தொகையைத் தாண்டிய ஒவ்வொரு இலத்திரனியல் பணப் பரிமாற்றப் பணக் கொடுக்கல் வாங்கலும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வங்கியினால் குஜருக்கு அறிக்கையிடப்பட வேண்டும். அவ்வாறு அறிக்கையிடப்பட வேண்டிய இலத்திரனியல் பணப் பரிமாற்றங்களுள் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பண அனுப்பீடுகள், ளுடுஜீ பரிமாற்றங்கள், ஊநுகுவு பரிமாற்றங்கள், சுவுபுளு கொடுக்கல் வாங்கல்கள், கடன் அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள், பற்று அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் (பொருத்தமெனின்), வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் என்பன (ஆனால், அவை மட்டுமல்ல) உள்ளடங்கும்.

இந்த விதிகளின் கீழ் வங்கியினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் வங்கியானது எவ்விதத்திலும் வாடிக்கையாளருக்குப் பொறுப்பாளியாகாது.

## 16. தகவல் வெளிப்படுத்தல்

16.1 கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கணக்கு(கள்) மற்றும்∴அல்லது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) சார்பில் வங்கியினால் செயற்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்(கள்) தொடர்பான தகவல்களை, ஏதேனும் சட்டத்தினால், விதிகளினால் அல்லது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) சார்பில் வங்கியானது கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்தும் தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தின் பிரமாணங்களினால் அல்லது ஏதேனும் பரிவர்த்தனை அமைப்பினால் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அத்தகைய நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு வெளியிடவும் வழங்கவும் கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு அதிகாரம் அளிக்கிறார் (அளிக்கிறார்கள்).

16.2 ஆரம்பநிலைக்கு மேற்பட்ட சகல வைப்புகளும் அறிக்கையிடப்படுவதற்கு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவினால் காலத்திற்குக் காலம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்படும் பிரமாணங்களுக்கு வங்கி பணிந்தொழுகும்.

**17. வாடிக்கையாளர் தகவல்களின் சேகரிப்பு, செயற்படுத்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளல்**

**17.1 சேகரிப்பு**

17.1.1 கார்கில்ஸ் வங்கியானது வாடிக்கையாளர் தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பயன்படுத்தும் கார்கில்ஸ் வங்கியின் வசதிகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். வாடிக்கையாளர் தகவல்கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் கார்கில்ஸ் வங்கியினால் அல்லது அதன் சார்பில் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) கார்கில்ஸ் வங்கிக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்படலாம் அல்லது இணைத்துக்கொள்ளப்படலாம்.

**17.2 செயற்படுத்தல்**

17.2.1 கார்கில்ஸ் வங்கி பின்வரும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்:

(ய) சேவைகளை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக.

(டி) பணிந்தொழுகுதல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக.

(உ) நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக.

(ன) வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக.

(ந) கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக.

(க) கார்கில்ஸ் வங்கியின் உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக.

(ப) கார்கில்ஸ் வங்கியின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடர் முகாமை, அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி

மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்).

(г) வாடிக்கையாளருடன் கார்கில்ஸ் வங்கி ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுவதற்காக (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு போன்றவை) (நோக்கங்கள்).

**17.3 பகிர்ந்துகொள்ளுதல்**

17.3.1 கார்கில்ஸ் வங்கியானது (அதன் நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) வாடிக்கையாளர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதையும் அத்தகைய பெறுநர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதையும் வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

(a) கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள், இணையாளிகள் (அவர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள்)

(b) கோரிக்கை விடுக்கும் ஏதேனும் அதிகார அமைப்புக்கள்

(c) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுபவர்கள், கொடுப்பனவைப் பெறுபவர்கள், பயனடைபவர்கள், கணக்கு நியமத்தர்கள், இடையீட்டாளர்கள், பிரதிநிதித்துவ மற்றும் முகவர் வங்கிகள், கிளியரிங் நிலையங்கள். கிளியரிங் அல்லது தீர்ப்பனவு அமைப்புக்கள், சந்தைப் பங்காளிகள், எதிர்நீரோட்ட இடைநிறுத்தல் முகவரகங்கள், பரிமாற்ற அல்லது வர்த்தக வைப்பகங்கள், பங்குப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளருக்கு அக்கறையுள்ள பிணையங்களை கொண்டிருக்கும் கம்பனிகள் (வாடிக்கையாளருக்காக கார்கில்ஸ் வங்கியினால் பிணையங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்)

(d) சேவைகளில் அல்லது சேவைகள் தொடர்பில் அக்கறையை அல்லது இடர் பொறுப்பை ஏற்கும் தரப்பினர்

(e) கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்.ஃவரி ஆலோசகர்கள்

(f) வாடிக்கையாளருக்கு சொத்து முகாமைச் சேவைகளை வழங்கும் எவரேனும் மூன்றாம் தரப்பு நிதி முகாமையாளர்

(g) கார்கில்ஸ் வங்கியின் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் தரகர்

(h) கார்கில்ஸ் வங்கியின் ஏதேனும் வியாபார இடமாற்றம், விற்பனை, ஒருங்கிணைப்பு அல்லது சுவீகரிப்பு தொடர்பில் சேவைகள் வழங்கப்படும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமுலிலுள்ள தரவுப் பாதுகாப்பு மட்டத்திலான தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டிராத நியாயாதிக்கப் பிரதேசங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் மேற்குறிப்பிட்டவை செல்லுபடியாகும்.

**17.4 வாடிக்கையாளர் கடப்பாடுகள்**

17.4.1 கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், காலத்திற்குக் காலமும் கார்கில்ஸ் வங்கியினால் வேண்டுகோள் விடுக்கப்படும் வேளையிலும் அதனை உடனடியாக, அல்லது எவ்வாறாயினும் 30 தினங்களுக்குள், எழுத்து மூலம் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

17.5 வாடிக்கையாளர் இணைக்கப்பட்ட ஒரு நபரின்.\.நபர்களின் தகவல்களை (தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உட்படும்) கார்கில்ஸ் வங்கிக்கு வழங்குவதற்கு முன், அத்தகைய நபருக்கு.\.நபர்களுக்கு அது பற்றி அறிவித்து, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அத் தகவல்களின் செயற்படுத்தல், வெளிப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இணைக்கப்பட்ட நபர்கள் தமது தனிப்பட்ட தகவல்களைப் பரிசீலிக்கவும், வேண்டுமானால் திருத்தம் செய்யவும், உரிமை கொண்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

17.6 பின்வரும் சந்தர்ப்பங்களில்,

17.6.1 கார்கில்ஸ் வங்கி நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை ஒரு வாடிக்கையாளர் வழங்கத் தவறினால், அல்லது

17.6.2 குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற அல்லது வெளிப்படுத்த கார்கில்ஸ் வங்கிக்குத் தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை வாடிக்கையாளர் வழங்காவிட்டால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென அல்லது எவரேனுமொரு வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு நிதிசார் குற்ற இடரை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதென கார்கில்ஸ் வங்கி சந்தேகித்தால்

கார்கில்ஸ் வங்கியானது,

(a) வாடிக்கையாளருக்கான சேவைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஒரு பகுதியைப் புதிதாக வழங்க அல்லது தொடர்ந்து வழங்க முடியாதிருக்கலாம். வாடிக்கையாளருடனான வியாபார உறவை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு.

(b) இணக்கப்பாட்டுக் கடப்பாடுகள் கார்கில்ஸ் வங்கியினால் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும். மற்றும்∴ அல்லது

(உ) வாடிக்கையாளர் கணக்கை (கணக்குகளை) தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடக் கூடும்.

**18 தரவுகளின் பாதுகாப்பு**

18.1 வாடிக்கையாளர் தரவுகள் உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக, அத் தரவுகள் அனைத்தும் கார்கில்ஸ் வங்கி, அவற்றின் ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் கடைப்பிடிக்கும் கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் பாதுகாக்கப்படும்.

**19 நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவச் செயற்பாடு**

19.1 நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், வங்கியின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்∴அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக கார்கில்ஸ் வங்கி பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண தற்றுணிபிற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் ("நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்"). அத்தகைய நடவடிக்கைகளுள் (ய) வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், திரும்பப் பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல், (டி) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல், (உ) வாடிக்கையாளர் தகவல்களை வங்கியிடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல்,

மற்றும்.'.அல்லது (ன) சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

19.2 நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை கார்கில்ஸ் வங்கி மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அபூர்வமான சந்தர்ப்பங்களில் கார்கில்ஸ் வங்கியினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வாடிக்கையாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம் அனுமதிக்கு அளவிற்கு, கார்கில்ஸ் வங்கியானது வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாக மாட்டாது.

## 20. வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை

ஏதேனும் கணக்கின் பேரில் பிணையின் மூலம் வங்கி கொண்டிருக்கும் ஏதேனும் பொதுப் பாத்தியம், எதிரீட்டு உரிமை அல்லது வேறேதும் உரிமைக்குக்குப் பாதிப்பு இல்லாமலும் அவற்றிற்கு மேலதிகமாகவும், வங்கியானது எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இல்லாமலும் பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதை கணக்கு வைப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்:

(ய) கணக்கு வைப்பாளர் தனியாக அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாக வைத்திருக்கக்கூடிய ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் ஏதேனும் நாணயத்தில் வரவாகவுள்ள ஏதேனும் பணத்தை ("பணம்") கணக்கு வைப்பாளர் தனியாக அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கொண்டிருக்கும் ஏதேனும் வகையான கடனை ("கடன்படுகை") (அக் கடன் இயல்பான, எதேச்சையான, தற்போதைய அல்லது எதிர்கால கடனாக இருக்கலாம்) ஈடு செய்வதற்குப் பிரயோகித்தல் (அத்தகைய பிரயோகம் ஏதேனும் வைப்பை முதிர்ச்சிக்கு முன்பே பெறும் நடவடிக்கையையும் உள்ளடக்குவதாக அமையக்கூடும்.

(டி) மேற்குறிப்பிட்ட கடன்படுகைத் தொகையானது கணக்கு வைப்பாளரின் கணக்கிலுள்ள பணத்திற்குச் சமமாக அல்லது அதிகமாக இருக்கும் பட்சத்தில்

கணக்கு வைப்பாளரினால் அவரது கணக்கிலிருந்து கோரப்படும் பணத்தை மீளளிக்க மறுத்தல் மேலே சரத்து 15இன் கீழ் வங்கி கொண்டுள்ள உரிமைகள் வாடிக்கையாளரின் மரணம் அல்லது சட்டபூர்வ இயலாமையினால் பாதிக்கப்பட மாட்டா.

**21. கைவிடப்பட்ட சொத்துகள்**

பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித கொடுக்கல் வாங்கலும் செய்யப்படாமல் வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் ஏதேனும் வங்கிக் கணக்கில் (நடைமுறை, சேமிப்பு, கால வைப்பு அல்லது வேறு) உள்ள ஏதேனும் மீதி, ஏதேனும் வங்கிக் கடனுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பிணை தவிர வங்கியில் வைத்திருக்கப்படும் வேறேதும் சொத்துக்கள் (பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களில் வைத்திருக்கப்படும் பொருள்கள் போன்றவை) என்பன கைவிடப்பட்ட சொத்துக்கள் என்று கருதப்படும்.

வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு வருடத்தினதும் முடிவிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வங்கியானது அத்தகைய கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய அறிக்கையை, நாணயச் சபையினால் குறித்துரைக்கப்படும் படிவத்தில், இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கும்.

இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட முப்பது (30) தினங்களுக்குள் அத்தகைய கைவிடப்பட்ட சொத்துக்களின் பட்டியலை வங்கியானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் வெளியிடும். சம்பந்தப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களின் பெயர்களும் விபரங்களும் இந்த அறிவித்தலில் அடங்கியிருக்கும்.

அதே சமயத்தில், கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றி அறிவித்து, அவற்றிற்கு உரிமை கோர நியாயமான கால அவகாசத்தை வழங்கும் வகையிலான அறிவித்தல்களை வங்கியானது சம்பந்தப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு அவர்களின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளுக்கு அனுப்பிவைக்கும்.

வாடிக்கையாளர் முறைப்படியான உரிமைக்கோரல் எதனையும் சமர்ப்பிக்காவிட்டால், வங்கியானது அதனால் தீர்மானிக்கப்படும் ஒரு நியாயமான காலத்திற்குள் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்:

i. சகல நாணயங்களிலும் செயலற்ற கணக்குகளில் பேணப்படும் பணத்தை இலங்கை மத்திய வங்கிக்கு இடம்மாற்றும்.

ii. பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களை உடைத்து அவற்றிலுள்ள பொருள்களை வெளியே எடுக்கும்.

வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலேனும் தமது அடையாளத்தை நிரூபித்து, இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்ட பணத்திற்கு உரிமை கோர முடியும்.

முறைப்படியான உரிமைக்கோரல் விடுக்கப்படும் வரை பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களில் இருந்த பொருள்கள் அழிக்கப்படாமல் வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும். கைவிடப்பட்ட சொத்துக்களுக்கு உரிமை கோரும் வாடிக்கையாளர்கள் அல்லது அவரது வாரிசுகள் மற்றும் அடுத்துறுநர்கள் தமது உரிமைக் கோரலுக்கு ஆதாரமாகச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறை தொடர்பில் வங்கிக்கு ஏற்படும் செலவுகள் யாவும் கைவிடப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களினால் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

**22. நானாவித விடயங்கள்**

22.1 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவற்றிற்கும் வேறேதும் சேவை, வங்கி வசதி, வியாபார உறவு, கணக்கு அல்லது வாடிக்கையாளருக்கும் கார்கில்ஸ் வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படுமானால், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும். வாடிக்கையாளர் உறவு தொடர்பில் ஏதேனும் சம்மதங்கள், அதிகாரமளிப்புகள், கார்கில்ஸ் வங்கியினால் கோரப்பட்ட தள்ளுபடிகள் மற்றும் அனுமதிகள் தற்போது இருக்குமாயின், உள்நாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்படும் அளவிற்கு அவை முழு வலுவுடன் நடைமுறையில் இருக்கும்.

22.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பாடுகள் முழுவதும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதி ஏதேனும் வழியில் ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாக, செல்லுபடியற்றதாக அல்லது அமுல்செய்ய முடியாததாக இருக்குமாயின், வேறேதும் நியாயாதிக்கங்களில் அத்தகைய ஏற்பாடுகளின் சட்டபூர்வத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை அல்லது அமுலாக்கத் தன்மை பாதிக்கப்பட மாட்டாது. அவ்வாறே அதே நியாயாதிக்கத்தில் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளின் சட்டபூர்வத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை, அமுலாக்கத் தன்மை என்பன பாதிக்கப்பட மாட்டாது.

**23. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை**

23.1 வாடிக்கையாளருக்கான ஏதேனும் சேவைகளின் வழங்கலை கார்கில்ஸ் வங்கி முடிவுறுத்தினாலும் வாடிக்கையாளரின் ஏதேனும் வாடிக்கையாளர் கணக்கு மூடப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

**24. விதிமுறைகளுக்கான திருத்தங்கள்**

24.1 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன் அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அல்லது வேறேதும் அதிகார அமைப்புக்களின் அறிவுறுத்தல்களினால் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படுமாயின், அல்லது வங்கியினால் தேவைப்படுத்தப்பட்டுத் திருத்தப்படுமாயின், அத் திருத்தங்கள் தன்னியல்பாக சேர்த்துக்கொள்ளப்படும்.

24.2 கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் பின்னர் கொண்டுவரப்படக்கூடிய ஏதேனும் திருத்தங்களுக்கும் முழுமையாகவும் சமமான முறையிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

24.3 வங்கியானது தனது பூரண தற்றுணிபின் பேரில் பொருத்தமெனக் கருதும் பட்சத்தில் காலத்திற்குக் காலம் முன்னறிவித்தல் இல்லாமலே இங்குள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையாவது சேர்க்க, நீக்க, திருத்த, இரத்துச்செய்ய அல்லது மாற்ற உரிமை கொண்டுள்ளது. வங்கியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் அவற்றிற்கான ஏதேனும் திருத்தங்களையும் றறற.உயசபடைடளடியமெ.உழஅ என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்க்கலாம் மற்றும்.־.அல்லது கணக்கு வைப்பாளர்கள் வங்கியின் கிளையொன்றில் கேட்டுப் பெறலாம். விபரக்கூற்றில் வழங்கப்படும் தகவல் மூலமும் அறிவிக்கப்படலாம். அவை அனைத்தும் வாடிக்கையாளர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

24.4 கணக்கை ஆரம்பிக்கும் அல்லது தொடர்ந்து பேணும் எந்தவொரு நபரும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் பொருத்தமான வேறேதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். கணக்கை ஆரம்பிக்கும்போது விண்ணப்பப் படிவத்தில் இதற்கான பிரகடனம் ஒன்று நிரப்பப்பட வேண்டும்.

## 25. விதிமுறைகளின் வாசகங்கள்

25.1 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆங்கிலம் சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் கிடைக்கும். அவற்றிற்கிடையே ஏதாவது முரண்பாடு காணப்படின் ஆங்கில வாசகமே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும்.

25.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில மற்றும் சிங்கள வாசகங்களை ஐஐஐ.உ யசபடைடளடியமெ.உ ழஅ என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்க்கலாம் அல்லது வங்கியின் கிளையொன்றில் கேட்டுப் பெறலாம்.

## 26. எதிர்பாராத நிலைமை

ஓர் எதிர்பாராத நிலைமை நீங்கும் வரை ஏதேனும் சேவை வழங்குவதை நாம் இடைநிறுத்தக்கூடும்.

“எதிர்பாராத நிலைமை” என்பது பின்வரும் எதையேனும் குறிக்கும்:

(ய) வெள்ளப்பெருக்கு, புயல், பூகம்பம் அல்லது வேறேதும் இயற்கை அனர்த்தம்.

(டி) யுத்தம், மோதல்கள், பயங்கரவாதம், புரட்சி, கிளர்ச்சி அல்லது உள்நாட்டுக் கலகம்.

(உ) வேலைநிறுத்தம், கதவடைப்பு அல்லது வேறேதும் தொழிற்றுறை நடவடிக்கை.

(ன) ஏதேனும் சட்டத்தில் திருத்தம் அல்லது ஏதேனும் சட்டத்தின் வியாக்கியானத்தில் அல்லது அமுலாக்கத்தில் ஏதேனும் திருத்தம்.

உங்களுக்குச் சேவை வழங்கப்படும் முறையில் உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது நாம் வழங்கும் வங்கி வசதிகள் உங்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யவில்லையெனின், தயவுசெய்து பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- ‚ 94 117 640 000 என்ற வாடிக்கையாளர் சேவை துரித இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்ளுங்கள்.
- உங்கள் பிரச்சினையை உரளவழஅநசளநசஎiஉநஃஉயசபடைடளடியமெ.உழஅ க்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.
- வாடிக்கையாளர் சேவைப் பிரிவுத் தலைவர், வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி, இல.696, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்குக் கடிதம் எழுதுங்கள்.

- நீங்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை உங்களுக்குப் பூரண திருப்தி அளிக்கும் வகையில் தீர்த்து வைக்கவே நாம் விரும்புகிறோம். எனினும், நீங்கள் விரும்பினால் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டும் நிவாரணம் கோரலாம். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு: நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143ஏ, வஜிர வீதி, கொழும்பு 05 தொலைபேசி: ூ 94 11 2 595 624 தொலைநகல்: ூ 94 11 2 595 625 மின்னஞ்சல்: ைகெழ஁கையெஉெயைடழஅடிரனளஅயெ.டம வலைத்தளம்: றறற.கையெஉெயைடழஅடிரனளஅயெ.டம
- மேலதிக விபரங்களுக்கு றறற.உயசபடைடளடியமெஉ.உழஅ என்ற எமது வலைத்தளத்தில் பிரவேசிக்கவும்.